

7 APR 1959
MADRAS

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 1] விளம்பி பங்குனி - 1959 ஏப்ரல் [மணி 7

# ஆலயங்கள்

ஆலயங்கள் கோட்டைகளாகவும் ஆபத்துக்காலங்களில் மக்களுக்கு காப்பு அரண்களாகவும் பயன்பட்டுள்ளன என்று சரித்திர வரலாற்றின் மூலம் அறிகிறோம். சமீபத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் புயல் காரணமாக மக்கள் அவதியுற்றபோது வேதாரண்யம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களில் மக்கள் பாதுகாக்கப்பெற்றனர் என்பது யாவரும் அறிந்ததே. பெரிய மதிற்சுவர்கள் அரண்களாக உபயோகிக்கப் பெற்றதல்லாமல் வழிபடும் அடியார்களின் தூய எண்ண அலைகளும் ஒலி அலைகளும் தங்கி ஆலயங்களின் புனிதத் தன்மையைக் காக்கவும் உதவுகின்றன.

ஆலயங்கள் கலைக் கோயில்களாகவும் விளங்கின. இறைவன் அருளால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களும் நாயன்மார்களும் பல கோயில்களுக்குச் சென்று வழிபட்டுத் தோத்திரப் பாடல்கள் பாடியுள்ளனர். அவனருளாலே அவனருளே கண்ணாகக்கொண்டு அவ்வடியார்கள் கண்ட அருட்கோலங்களே நம் ஆலயங்களில் கோயில் கொண்டுள்ள திருவுருவங்கள்.

ஆலயங்களில் வேத பாடசாலைகள், புராண சாத்திர ஆராய்ச்சி மன்றங்கள், தேவாரம் திவ்யப்பிரபந்தங்கள் ஓதுதல், சமய நீதிநூல்கள் ஆராய்ச்சி, ஹரிகதா காலக்ஷேபங்கள் முதலிய பல கல்வி அறிவு ஒழுக்க நெறிகளை வளர்க்கும் நிலையங்கள் சிறந்து விளங்கின.

ஆலயங்களில் பல அரிய நூல்கள், ஏடுகள் முதலிய சேகரித்து வைக்கப் பெற்று கலைக்கூடங்களாகப் பயன்பட்டன. இக்காலத்திலும் பல திருக்கோயில்களில் நூல் நிலையங்கள் நிறுவப் பெற்றுள்ளன.

ஆலயங்களில் ஆதுலர் சாலைகள் என்று வழங்கப்பெற்ற வைத்திய சாலைகள் இருந்தனவென்பது திருமுக்கூடல் கல்வெட்டிலிருந்து தெரிகிறது. சமீபகாலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குற்றாலத்துக் கருகேயுள்ள திருமலைக் குமாரசாமி

கோவில் ஆதரவிலும் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலத்துக்கருகேயுள்ள திருப்புகலூர்க் கோயில் ஆதரவிலும், சித்த வைத்தியசாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும் நிறுவப் பெற்றுள்ளன. குறைந்த செலவில் பல மக்களுக்குப் பயன்படும் வகையில் மருந்துகள் தஞ்சாவூரில் சித்த வைத்திய நிபுணர் உயர்திரு கண்ணுசாமிப்பிள்ளையவர்கள் நேர் பார்வையிலும், தென்னாற்காடு மாவட்ட நீதிபதி உயர்திரு பலராமையா அவர்கள் மேற்பார்வையிலும் தயாரிக்கப் பெறுகின்றன. சாதாரண நோய்களுக்கும் அம்மை பேதி முதலிய தொத்துநோய்களுக்கும் உபயோகிக்கக் கூடிய சுமார் 16 மருந்துகள் அடங்கிய பெட்டி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. சொற்பச் செலவில் சுமார் 1000 பேர் கொண்ட ஒரு கிராமத்துக்கு ஒரு ஆண்டுக்கு உபயோகிக்கக்கூடிய மருந்துகள் இப்பெட்டிகளில் அனுப்பப்படும். இம்மருந்துகளைக் கூடிய வரையில் இலவசமாகவே மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதே இத் திட்டத்தின் நோக்கம். வைத்தீஸ்வரன்கோயில் முதலிய இடங்களிலும் இம்மாதிரியான சித்தவைத்திய ஆராய்ச்சி மன்றங்கள் துவக்கப்பெறலாம்.

பண்டைநாள் தொட்டு நம் ஆலயங்கள் சங்கீதம், நாட்டியம், ஓவியம், சிற்பம் முதலிய பல கலைகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தன. சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள நிர்த்தன சபையிலும் தஞ்சைப்பெருங்கோயில் விமானத்திலும் உள்ள நாட்டிய சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. மதுரை, திருநெல்வேலி, சுசீந்திரம் முதலிய கோயில்களில் உள்ள இசைத் தூண்களும் அரிய வேலைப்பாடுடையன. தஞ்சைக் கோயில் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள உட்பிரகாரத்தில் உள்ள சோழ நாயக்க மன்னர்கால ஓவியங்களும், சித்தன்னவாசல் முதலிய இடங்களிலுள்ள ஓவியங்களும் பிற நாட்டாரும் போற்றும் வகையில் அமைந்துள்ளன.

இம்மட்டோ! நமது ஆலயங்களின் ஆதரவில் தேசாந்திரிகளுக்கும் ஏழைகளுக்கும் உணவளித்தல், பஞ்சகாலங்களில் மக்களுக்கு உதவி செய்தல் முதலிய சமூக் சேவைகளும் நடைபெற்றன.

**"நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடுங் கோயில் பரமர்க் கங்காகும்"**

என்ற திருமந்திரம் யாவரும் அறிந்ததே.

சம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலைக்குச் சென்றபோது அங்கு பஞ்சத்தால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக் கண்டனர். இருவரும் இறைவனைத் துதித்துக் காசு பெற்று மக்களுக்கு உணவளித்துக் காத்தனர்.

நமது ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்களில் பெரும்பாலும் அவ்வாலயங்களைக் கட்டிய அரசர் அல்லது பெரியாரின் பெயர்களையும் காலத்தையும் காண்பதரிது. அந்தக் கோயில்களுக்குத் திருப்பணியாகவும் பூசைகள் திருவிழாக்களுக்காகவும் ஏற்படுத்தப்பெற்ற சாசனங்களே அதிகமாக இடம் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைவாயில் என்ற தலத்திலுள்ள கோயிற்சுவரில் இருந்த சம்பந்தர் பதிகம் முன்பு சிதம்பரத்தில் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருளால் நம்பியாண்டார் நம்பியால் எடுக்கப்பெற்ற ஏடுகளில் காணப்பெறுதது. திருஉத்திரமேரூர் கோயில் ஒன்றில் கிராமப் பஞ்சாயத்துத் தேர்தலில் குடத்தில் சீட்டுக்களைப்

போட்டு எண்ணும் முறை கையாளப் பெற்றதாகக் கல்வெட்டில் காணப்படுகிறது. இத்தகைய கல்வெட்டுக்கள் மூலம் பல அரசர்களின் மெய்க்கீர்த்திகளும் அவற்றின் வாயிலாகத் தென்னாட்டுச்சரித்திர வரலாறுகளும் விளக்கம் பெறக் காண்கிறோம்.

கந்தபுராணம், பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய பல காவிய நூல்கள் ஆலயங்களிலேயே அரங்கேற்றப் பெற்றன. அரசர்களின் முடிசூட்டு விழாக்களும் கோயில்களில் நடைபெற்றதாகத் தெரிகிறது. கூற்றுவ நாயனார் தனக்கு நடராஜப் பெருமான் திருமுன்பு முடிசூட்டவேண்டுமென்று கேட்டபோது தீக்ஷதர்கள் மறுக்க இறைவனே அவருக்கு திருவடி தீக்ஷை செய்ததாகப் பெரிய புராணம் கூறுகிறது. திருவாங்கூர் அரசர்கள் ஸ்ரீபத்மநாப சுவாமியின் தாசர்களாகவே அரச பதவியேற்று பத்மநாப தாசன் என்றே கையொப்பமிட்டு ஆட்சி புரிந்து வந்தனரென்பது உலகறிந்ததே.

திருக்கோயில்களில் பட்டி மண்டபங்களும் வழக்கு மன்றங்களும் இருந்தன என்பது திருவொற்றியூர் திருவெண்ணெய்நல்லூர் கோவில்களினின்றும் விளங்குகிறது. நல்லூரருட்டுரைப் பெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்டபோது அவரைக் கூட்டி வந்தயிடம் திருவெண்ணெய்நல்லூர் ஆலயத்தின் முன்பாகத்திலுள்ள வழக்கு வென்றதிருவம்பலம் என்னும் மண்டபம். அது இப்போது அரசாங்க மான்ய உதவியுடனும் பொதுமக்கள் நன்கொடையுடனும் திருப்பணி செய்யப்பெறுகின்றது.

திருவாமாத்தூர் ஆலயத்தில் குருடர்கள் தேவாரம் ஓதுவதற்காக ஏற்பாடு செய்யப்பெற்று அவர்களுக்கு உணவளிக்க நிலம் ஒதுக்கப்பெற்றிருந்த செய்தி கல்வெட்டில் காணக்கிடக்கிறது.

கிராமத்திலுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையை ஆலயப் பூசைகளுடன் இணைத்து நடத்திவந்தனர். அதிகாலையில் திருக்கோயிலில் மணியடித்ததும் எல்லோரும் எழுந்து தங்கள் காரியங்களைத் துவக்கவும் இறைவனை வழிபடுவோர் வழிபட்டும், இயலாதவர் இறைவன் புகழ் பாடியும் நினைந்தும் தம் கருமங்களைச் செய்ய முற்பட்டனர். அதேபோன்று காலை மதியம் மாலை இரவு பள்ளியறைப் பொழுது முதலிய ஒவ்வொரு காலமும் ஆலய மணியோசை கேட்கும்பொழுதெல்லாம் இறையருளை நினைந்தும், பாடியும் வழிபட்டும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து வந்தனர்.

---

## விருத்தாசலம் ஸ்ரீ பழமலை நாதர் ஆலயத்தில் "பன்னிரு திருமுறைப் பிரதிஷ்டை"

19—2—59 வியாழன் பகல் 12 மணிக்குப் பழமலை நாதரின் ஆருந்திருவிழா வன்று, சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு A. உத்தண்டராமபிள்ளை, I. A. S., அவர்கள், பன்னிரு திருமுறைகளின் பெருமைபற்றி அரியதோர் சொற்பொழி வாற்றினார்கள். ஓதுவாமூர்த்திகள் தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளை இன்னிசையுடன் பாடி வர, பன்னிரு திருமுறைகளை அலங்கரித்து ஆலயத்தை வலம் வரச்செய்து நடராஜப் பெருமான் திருமுன் ஷ்டி திருமுறைகளைப் பிரதிஷ்டை செய்தார்கள்.

# சைவம்

திரு K. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## மூன்றும் சூத்திரம்

உடம்புதோறும் காணப்படும் ஒழுங்கு பட்ட அறிவு செயல்களுக்கு மூலமாய், யான் என்னும் உணர்வுவடிவில் விளங்குவதே உயிர் அல்லது ஆன்மா எனப்படும். அதனை யாதோ என ஆராய்ந்த பலர் பலவகைப்படக் கூறியுள்ளனர்:—

(1) அஃது இன்னது என அறிய வாராமையின், அதனைச் சூனியம் என்றனர் புத்தர்; (2) உடம்பையே யான் என வழங்கி வருதலின், உடம்பே ஆன்மா என்றனர் உலக வாதிகளுள் ஒருசாரார்; (3) அவருள் மற்றொரு சாரார் ஐம்பொறிகளே அறியக் காண்டலின், அப்பொறிகளே ஆன்மா என்றனர்; (4) உயிர்ப்பு இல்லையாயின் உயிர் இல்லை எனக் கோடலின், உயிர்ப்பாகிய பிராண வாயுவே ஆன்மா என்றனர் ஒரு சாரார்; (5) நாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் மனத்துக்கொண்டு, சிந்தித்து, நிச்சயித்து, இன்பத்துன்ப வேதனைப் படுதலின், அவை அகத்தே நிகழ்வன ஆகலின், அவ்வாறு சிந்தித்தல், துணிதல், வேதனைப்படல் என்னும் தொழிற்பாடுள்ள உள்ளத்தின் கூறுபாடுகளாகிய அந்தக் கரணங்களே (மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அகக்கருவிகள்) ஆன்மா என்றனர் வேறொரு சாரார்; (6) கனவின்கண் நுண்உடல் கொண்டு நனவிற்போலக்கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து வருதலின், அதற்குக் காரணமாகவுள்ள நுண் உடம்பே ஆன்மா என்றனர் மற்றொரு சாரார்; (7) "பிரஞ் ஞானம் பிரம்ம" என உபநிடதம் கூறலின், சச்சிதானந்த மயமாயுள்ள பிரம்மமே ஆன்மா என்றனர் சங்கரர் முதலாயினோர்; (8) உடலின் கூறுகள் உளத்தின் கூறுகள் அனைத்தும் ஒருங்குகூடி ஒழுங்குபட இயங்கும்போதே நமக்கு உணர்வு உண்டாகின்றது; அல்லாதபோது உணர்வு இல்லை; ஆகலின், அகப்புறக் கருவிகள் அனைத்தின் கூட்டமே ஆன்மா; இவற்றுக்கு வேறாக ஆன்மா என ஒன்றில்லை என்றனர் புத்தரில் ஒரு சாரார்.

இந்த எண்மர் மதங்களில் எழுவர் மதம் இம்மூன்றும் சூத்திரத்தால் மறுக்கப்பட்டு ஆன்மாவின் உண்மை தெளிவிக்கப்படுகின்றது. அந்தக்கரணங்களே ஆன்மா என்பார் மதம் நான்காம்சூத்திரத்தால் மறுக்கப் படுகிறது.

இனி மூன்றும் சூத்திரத்தின் பொருள்வருமாறு:

(1) **ஆன்மா சூனியம் அன்று:** பல வகையால் எது ஆன்மா என ஆராய்ந்து, முடிவில் சூனியமே ஆன்மா எனத் துணியும் போது, அவ்வாறு துணியும் அறிவு உள்ளது அல்லவா? அவ்வறிவே ஆன்மா என உணரத்தக்கது.

(2) **பருவுடல் ஆன்மா அன்று:** என் ஊர்; என் வீடு, என் மனைவி என—ஊர், வீடு, மனைவி முதலிய உடைமைகளை நமக்கு வேறாக உணர்கிறோம் அல்லவா? அதுபோல, என் கை, என் தலை, என் உடம்பு என இவ்வுடம்பு நமக்கு வேறாக உணரப்படுகின்றது. ஆதலால், யான் என்னும் உணர்வு வடிவில் விளங்கும் ஆன்மா இவ்வுடம்புக்கு வேறாக உள்ளது.

(3) **ஐம்பொறிகள் ஆன்மா அல்ல:** கண் காணும்; ஆனால் கேளாது. செவி கேட்கும்; ஆனால் காணாது. இங்ஙனம் ஐம்பொறிகளுள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறிவதில்லை. ஆயின், ஒரு பழத்தைக்கண்டு, வாங்கி, மோந்து, சுவைத்து நுகரும்போது, கண்டயானே வாங்கினேன்; பின் அதனை மோந்தேன்; பின் சுவைத்து உண்டேன்—எனச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன் உணர்வும் ஒரே அறிவின் கண் இணைந்து தொடர்புபட நிகழ்தலின்,

இவ்வாறு அறிவதாகிய ஆன்மா ஐம்பொறிகளுக்கும் வேறுதல் வேண்டும்.

(4) **கனவுடலாகிய நுண்உடம்பு ஆன்மா அன்று;** கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் தெளிய உணரமாட்டாது மயங்கி அரைகுறையாகவும் வேறுபடவும் உணர்கின்றோம். கனவுடம்பே ஆன்மா ஆயின், நனவின்கண் இம் மருட்கை உளதாகாது. நனவில் பருவுடம்பிற்பட்டும் கனவில் நுண்ணுடம்பிற்பட்டும் உணர்தல்பற்றி உடம்பு வேறுபாடு-கரண வேறுபாடு—இருத்தலால்தான் ஈரிடத்தும் அறிவு வேறுபட நிகழ்கின்றது. ஆகலின், கனவில் நுண்ணுடம்பைப் பற்றுவதாகவும் நனவில் அதைவிட்டுப் பருவுடம்பைப் பற்றுவதாகவும் உள்ள அறிவு (ஆன்மா) அவை இரண்டிற்கும் வேறேயாம்.

(5) **பிராணவாயு ஆன்மா அன்று:** நனவு, கனவு, உறக்கம் மூன்றிலும் பிராணவாயு ஒருபடித்தாக இயங்குதலைக் காண்கிறோம்; நனவில் பருவுடம்பு தொழிற்படுகிறது; இன்பத் துன்ப நுகர்ச்சிக்குக் காரணமாக நிகழ்கின்றது; ஆனால் உறக்கத்தில் பருவுடம்பின்கண் தொழிற்பாடும் இன்பத்துன்ப நுகர்ச்சியும் நிகழவில்லை. பிராணவாயுவே ஆன்மாவாயின், நனவு, கனவு, உறக்கம் மூன்றினும் இன்பத்துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் பருவுடம்பில் ஒரேமாதிரி நிகழவேண்டும். அவ்வாறு நிகழாமையின், பருவுடம்பு, கனவுடம்பு, மனம் புத்தி அகங்காரம் என்னும் அகக்கருவிகள்—என்பவற்றுடன் கூடியும் பிரிந்தும் அவத்தைப்படும் ஆன்மா பிராணவாயுவுக்கு வேறேயாம்.

**6. பிரமம் ஆன்மா அன்று:** முதற்பொருளாகிய பரப்பிரமம் இயற்கை முற்றுணர்வுடையது; எக்காலத்தும் எல்லாப் பொருள்களையும் ஒரு படித்தாக அறிந்து நிற்பது. ஆயின், உடம்பு தோறும் **யான்** என நிகழும் உணர்வு உணர்த்த உணரும் செயற்கைச் சிற்றறிவாக உள்ளது. இஃது உடம்பில் உள்ள கருவிகளால் அறிவு விளங்கப் பெறுவது; நனவு நிலையினும், நூல், ஆசிரியன், உடன்பயில்வோர், உலக அனுபவம்—என்னும் உதவிகளால் படிமுறையில் ஐயமும் மருட்கையும் நீங்கி அறிவு வளரப் பெறுவது. ஆதலால், பரப் பிரமத்திற்கு வேறாக அதன உதவியைப் பெறுவதே ஆன்மா என்பதே உண்மை நூல்களின் துணிபு.

**7. உடம்பு முதலாகவுள்ள கருவிகளின் கூட்டமே ஆன்மா என்றலும் பொருந்துவதன்று:** அக் கருவிகளெல்லாம் கலைமுதலாக நிலம் வரை முப்பத்தொரு பெயர்பெறும்; அவற்றைத் தொகுத்துக் காணும்போதும் பருவுடம்பு, நுண்ணுடம்பு, பரவுடம்பு எனப் பெயர் பெறுவதன்றி ஆன்மா எனப் பெயர் பெறுவதில்லை. ஆதலின், ''இது'' எனச் சுட்டப்படும் பொருள்கள் அனைத்திற்கும் வேறாய், அவ்வாறு பிற பொருள்களைச் சுட்டி உணர்ந்து அவற்றில் அழுந்தியும் 'இது நான் அன்று' என அவற்றின் நீங்கியும் அவத்தைப் பட்டுவரும் உணர்வே ஆன்மா. அது கண்ணுக்குக் கண்ணாடி போல நின்று உதவும் மாயா காரியமாகிய பொருள்களுள் ஒன்றும் அன்று; முதல்வன் மாயையைக் கடந்து நிற்பவன் ஆதலின், முதல்வன் ஆதலும் இன்று—மாயா காரியத்திற்கும் முதல்வனுக்கும் வேறாய், அவ்விரண்டாலும் பயன் கொள்ளும் மூன்றாவது பொருளாம்.

ஊன்றி நோக்கின், நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தம் என்னும் ஆறு தரிசனங்களிலும், உலகாயதம், பௌத்தம், சமணம் என்னும் புறச் சமயங்களிலும் கூறப்படும் பதார்த்த நியமனம் எல்லாம் இதுகாறும் சுருக்கமாக விளக்கப்பட்ட மூன்று சூத்திரப் பொருள் நிலையில் அடங்கி மறுப்புண்டு போதல் விளங்கும்.

**நான்காஞ் சூத்திரம்:**

உயிர்க்கு நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்னும் ஐந்து உணர்வு நிலைகள் அன்றாடம் முறையே ஏறு வரிசையிலும், பின் இறங்குவரிசையிலும் நிகழக்காண்கிறோம். ஏறு வரிசையில் பொருள் உணர்வு (Objective consciousness) மேன்மேலும் விளக்கமுற்று வருதலும், இறங்கு வரிசையில் அவ்வுணர்வு மங்கி அறியாமை மேம்பட்டு நிகழ்தலும் நம் அனுபவமாக உள்ளன. ஆதலினால், உயிர்க்கு அறியாமையை விளைப்பதாக இயற்கை மலம் ஒன்று உண்டென்பது உணரப்படும். மனம் புத்தி, ஆங்காரம், சித்தம் என்னும் அகக்கரணங்கள் அவ்வறியாமையை விலக்கி, உலகப் பொருள்

களை உணர்ந்து தக்கபடி எதிர் இசைவுபுரிய (Respond) உதவுகின்றன என்பதும் உணரப்படும்.

இங்குக் காட்டிய அனுபவம் பற்றி மேலும் தற்சோதனை (Introspection) உள்நோக்கு நெறியில் நின்று நோக்கின், உயிர்க்கு மூன்று அடிப்படை உணர்வு நிலைகள் உள்ளன என்பது விளங்கும். அவை கேவலம், சகலம், சுத்தம் எனப்படும். கேவலம் அறியாமையில் அழுந்தும் நிலை; இது நூல்களில் இரவு எனப்படும். சகலம் உலகப் பொருள்களின் தன்மையில் அழுந்தும் நிலை; இது பகல் எனப்படும். சுத்தம் முதல்வன் திருவருளின் அழுந்தும் நிலை; இதுவே நூல்களில் இராப் பகலற்ற இடம் எனப்படும். கேவலத்திலிருந்து சகலத்தைத் தலைப்படும் நெறியில் மேலே காட்டிய உயிர்ப்படக்கம், பேருறக்கம், உறக்கம், கனவு, நனவு என்னும் ஐந்து ஆக்க நிலைகளும், இவ்வாறு ஏறுவரிசையில் நிகழும். இவை போலவே சகலத்தில் ஐந்து ஆக்கநிலைகளும், சுத்தத்தில் ஐந்து ஆக்க நிலைகளும் உள்ளன. தன்னை உணரப்புகுவார் இந்நிலைகளை யெல்லாம் சகலத்தில் நின்று முன்னும் பின்னும் கூட்டி உணர்தல் வேண்டும்.

### ஐந்தாம் சூத்திரம்

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும் தத்தமக்குரிய ஊறு, சுவை, உரு, நாற்றம், ஓசை என்பவற்றை அறியும் போது மேலே சொல்லிய உயிரால் செலுத்தப்பட்டே அறியும்; ஆயினும் அவை புறநோக்கு ஒன்றே உடையவை ஆதலால், தம்மையும் அறிவதில்லை, தம்மைச் செலுத்திநிற்கும் உயிரையும் அறிவதில்லை. இவற்றைப் போன்ற இயல்புதான் உயிர்களாகிய நமக்கு உள்ளது. உயிர் ஒரு பொருளை அறியும் போதும் ஒரு செயலைச் செய்யும்போதும், முதல்வனால் அறிவிக்கப்பெற்றும், செலுத்தப்பெற்றும் தான், அறிகிறது, செய்கிறது. ஆயினும், அது பொருள் நோக்கு (Objective conciousness) உடையதாகவே இருத்தலின், தன்னையும் அறிவதில்லை; தன் உணர்வின் முதலாக இருந்து தொழிற்படுத்தும் முதல்வனையும் அறிவதில்லை. காந்தம், தான் அசைவின்றி இருந்தே, இரும்பைத் தன் ஆற்றலால் இயக்குமாறு போல, இறைவன் உயிர்களைத் தொழிற்படுத்துகின்றான். ஆதலின், அவன் எல்லாவுயிர்களுக்கும் உபகரிப்பவனாக இருந்தும்தான் சிறிதும் விகாரப்படுவதில்லை.

### ஆறும் சூத்திரம்

முதல்வன் நம் அறிவால் அறியப்படுபவனா? அல்லனா? அறியப்படுபவன் என்றால், அறியப்படும் பொருள்களெல்லாம் அறிவில் பொருள்களாகவும் அழிவனவாகவும் இருத்தலின், முதல்வனும் அறிவில் பொருளாய், அழியும் பொருளாய் முடிவான். எவ்வாற்றானும் அறியப்படாதவனே ஆவன் எனின் நம் உணர்வில் தட்டாத பொருளால் நமக்கு எந்தப் பயனும் உளதாகாது; ஆதலினால், அவனை இல்பொருள் என்றே கொள்ள நேரும். இங்ஙனமாகலின், அவன் நம் சுட்டறிவுக்கு அப்பாற்பட்டவன் எனவும், பாசங்களினீங்கிச் சுட்டாது ஒற்றித்து நின்று உணரும் அநுபவ உணர்வுக்கு விடயமாகுவன் எனவும் கொள்ளுதலே பொருத்தம் ஆகும். இதனால், அவன் சித்தாகவும் உள்பொருளாகவும் இருப்பன் என்பதையும் உணரலாம். எனவே முதல்வனைச் சிவசத்து எனக் கூறலாம். சிவம்-சத்து, சிவசத்து—சித்துச்சத்து, அறிவு வடிவாய் உள்ள செம்பொருள்.

### ஏழாம் சூத்திரம்

நம் உடம்பு, உடம்பின்கண் அமைந்துள்ள கருவிகள், உலகு, நுகர்ச்சிப் பொருள் எல்லாம் தோன்றி நின்று அழிவன ஆகலின் அசத்து எனப்படும். செம்பொருளாகிய முதல்வன் சத்தெனப்படுவன். பிறப்பு நிலையில், நாம் அசத்தாகிய பொருள்களை அசத்தாகிய கரணங்களைக்கொண்டு அறிந்து, அவ்வசத்தின் வண்ணமாய் இருந்து வருகின்றோம். வீட்டு நிலையில் சத்தாகிய செம்பொருளை, அதன் திருவருளால் உணர்ந்து, அதன்வண்ணமாய் இருப்போம். இதனால், இருதிறனையும், இருதிறனாலும் அறிந்து, இருதிறனின் கண்ணும் உள்ளதாய் விளங்கும் இயல்பே ஆன்மாவின் சிறப்பியல்பு என்பது உணரப்படும். இவ்வியல்பு காரணமாகப் பிறப்பின்கண் உயிர் இவ்வுடம்பேயான் என்னும் அநுபவம் உடையதாய் வருவது போலவே, வீட்டின்கண் யான்

பிரமம் (அஹம்பிரஹ்மாஸ்மி) என்னும் அநுபவம் உடையதாய் இருக்கும். அதுபற்றி "முதற்பொருள் என வேறில்லை; ஆன்மாவே முதற்பொருள்" என முடிவு கூறுதல் சரியன்று. ஆன்மா அசத்தைச் சார்ந்து அசத்தாயும், பின்சத்தைச் சார்ந்து, அவ்வசத்தை நீங்கிச் சத்தின் வண்ணமாயும் நிற்கும். இக்காரணத்தால் சித்தாந்த சைவத்தில் ஆன்மா "சதசத்து" எனப்படும்.

## எட்டாஞ்சூத்திரம்

முன் முன் பிறவிகளில் பயன் கருதாது செய்துவந்த சரியை கிரியை யோகங்களாகிய தவமுதிர்ச்சியினால், உயிர்க்குயிராக இருந்து உணர்த்திவரும் முதல்வன் ஞானாசிரியனாகத் தோன்றி மெய்யுணர்வை அளித்தருளுவன். மன்னவன் மகன் வேடர் இடத்தே தங்கித் தன் பெருந்தன்மையை மறந்து வாழ்வது போல, சிவானந்தப் பெருஞ் செல்வத்தைப் பெற்று வாழ்வதற்குரிய சிவகுமாரனாகிய உயிர் ஐம்பொறிகள் முதலிய தத்துவக் கூட்டங்களுடன் சேர்ந்து, தன் பெருந்தன்மையையும் சிவத்தோடு தனக்கு உள்ள சம்பந்தத்தையும் அறியாது, பிறப்பிறப்புட்பட்டு உழலும், இவ்வுண்மையை ஞானாசிரியன் பக்குவ முதிர்ச்சியுள்ள உயிர்க்கு உணர்த்தியருளுவன். இவ்வுண்மையைக் கேட்டவுடன், உயிர் தத்துவக் கூட்டங்களினின்றும் நீங்கி, முதல்வன் திருவடியில் பிரிப்பின்றி ஒன்றி இன்புறு நிலையை எய்தும். எட்டாஞ் சூத்திரப் பொருள் "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாராநெறி" என்னும் திருக்குறளின் விரிவுரையாக அமைதல் காண்க.

## ஒன்பதாம் சூத்திரம்

அசத்தாகிய தத்துவங்களோடு கூடுவதால் உயிர்க்கு உண்டாகும் சுட்டுணர்வு பாசஞானம் எனப்படும். மூன்றும் சூத்திரத்துக் கூறியவாறு. "நான் யார்" என உயிர் தன் உண்மையை ஆய்ந்துணரின், அது மாயா காரியமாகிய கருவி கரணங்களின் தொடர்பு நீங்கித் தன்வியாபக நிலையை உணரும்; அவ்வாறு உணரும் நிலையில், பாசம் நீங்கினும் அதன் வாதனை காரணமாகத் தன்னை "நான் பரம் பொருள்" என உணரும். இவ்வுணர்வு பசுஞானம் எனப்படும். பகற் பொழுதில் அளப்பரிய ஆகாயத்தைக் காணலுறும் போது, ஆகாயத்தின் அவ்வளப்பரிய விளக்கம் அதன்கண் கலந்து விளங்கும் ஞாயிற்றின் பேரொளி காரணமாக உளதாதல்போல், பாச நீக்கத்தில் உயிரின்கண் விளங்கும் வியாபகம் முதல்வன் திருவருள் சார்பு பற்றிய விளக்கமாகும் எனத் தெளிந்து, அத்திருவருள் ஒளியில் 'யான் எனது' என்னும் செருக்கு அற அடங்கி நிற்பின் அவ்வருளுக்கு முதலாக உள்ள சிவம் பேரின்ப வடிவாய்த் தோன்றி ஆன்மாவைத் தன் வயப்படுத்தி இன்பூட்டும். இவ்வாறு திருவருளே கண்ணாகக் காணும் காட்சியே மெய்யுணர்வு அல்லது சிவஞானம் எனப்படும்.

பாசக்கூட்டம் எல்லாம் கானல் நீர்போல் சடுதியில் தோன்றி மறைவன என, அவற்றைத் தனக்கு வேறாகக் கண்டு பற்றுச் செய்யாது நிற்ப, அவ்வாறு நிற்கும் உயிரின் அறிவின்கண் திருவருள் ஞானம் பிறவி வெப்பத்திற்குத் தண்ணிய நிழல்போல் வெளிப்படும். பாசஞானத்தாலும், பசுஞானத்தாலும் பற்ற முடியாத பேரின்ப முதல்வனை அத்திருவருள் ஞானத்தால் தன் அறிவின்கண் ஒருவன் நாடுதல் வேண்டும். இவ்வாறு சிந்தித்துக் காணும் காட்சி சலியாதிருத்தற் பொருட்டு முத்தி பஞ்சாக்கரம் சுத்தமானதமாக எண்ணப்படும். ஒன்பதாம் சூத்திரப் பொருள் "ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்னும் திருக்குறளின் விரிவுரையாக அமைதல் காண்க.

(தொடரும்)

சென்னை, சென்ன மல்லீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 14-3-59 முதல் 27-3-59 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

# சிதம்பர சுவாமிகள்

எண்ணி லாத நெடுங் காலம்
எண்ணி லாத பல பிறவி
எடுத்தே யிளைத்திங் கவைநீக்கி
இம்மா னிடத்தில் வந்துதித்து
மண்ணின் வாழ்க்கை மெய்யாக
மயங்கி யுழன்று லடியேனுன்
மாறுப் பெருமை தரும்பாத
வனசத் துணையென் றடைவேனே
கண்ணின் மணியே உயிர்க்களியே
கருணைப் புயலே சுகக்கடலே
கச்சித் தாயுச் சியைமோந்து
கண்ணோ டணைக்குந் திருத்தாளா
புண்ணியோ ரெண்ணிய கரும்பே
பொழிமும் மதவா ரணமுகத்தோன்
பொற்பார் துணையே அற்புதனே
போரூர் முருகப் பெருமானே.

—திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

சங்கம் இருந்து தண்டமிழ் வளர்த்தது மதுரை. அப்பதியில் சங்கப் புலவர் மரபில் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு தோன்றிய துங்கர் ஒருவர். சிதம்பரம் என்னும் பெயருடையார்; இலக்கிய இலக்கணங்களை இளமையிலேயே ஐயந்திரிபறக்கற்றார். கல்வி கேள்விகளில் புலமை மிக்கவராய் விளங்கினமையின் இவரை சிதம்பர கவிராசர் என்று அழைத்தனர். ஆலவாய் அண்ணலின் அருகெழுந்தருளிய அங்கயற்கண்ணம்மையிடம் பேரன்புடையவர்; வழிபடு கடவுளாகவும் வணங்கி வந்தனர். மீனாட்சியம்மை கலிவெண்பா என்னும் நூலை அவ்வம்பிகையின்மீது பாடினார். அந்நூல் சொற்சுவை, பொருட்சுவை மிக்குடையது. எடுத்துக் காட்டாக கீழே ஒரு பகுதி தரப்படுகிறது :—

'மாணிக்கவல்லியே மாமரகதப்பணியே
ஆணிக்கனகத்தரும் பொருளே—மாணுற்ற
சிங்காரவல்லியே செம்பொற் சிலைவளைத்த
கங்காளற் கன்பான கண்மணியே—மங்காத
தெய்வக் குலக்கொழுந்தே செம்பட்டு
டைத்திருவே
ஐவருக்குந் தாயாய் அமர்ந்தவளே—
மெய்யருக்குச்
சித்தி கொடுக்குஞ் சிவானந்தி அன்பருக்கு
முத்தி கொடுக்குஞ் ஞானமூர்த்தியே'

அக்காலத்தே வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தங்கையாகிய ஞானம்பிகையாரை மணந்தவர் சாந்தலிங்கர். பின்னர் துறவறமேற்று அவிநாசியில் இருந்தார். திருமுதுகுன்றத்திலிருந்த பெரியாரான குமார தேவர், சாந்தலிங்க அடிகளாரைக் குருவாகக் கொண்டிருந்தார். விருத்தாசலத்திலிருந்து அவிநாசிக்கு ஆசிரியரைக் காணப் போகும் வழியிலுள்ள ஒரு ஊரில் செல்வரான ரெட்டியார் ஒருவர் வீட்டில் தங்கி, உணவுண்டு செல்வது குமாரதேவருக்கு வழக்கம். அவ்வன்பருடைய மக்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கத் தக்கார் ஒருவரைத் தேடி நின்றார். மதுரை சிதம்பர கவிராசர் புகழ் பரவி யிருந்ததால் அவரை வருவித்துத் தம் பிள்ளைகளுக்கு ஆசிரியராக அமர்த்தினர்.

ரெட்டியார் இல்லத்துக்கு ஒருநாள் குமரதேவர் வந்தார். சிதம்பர கவிராசரின் புலமையை உணர்ந்தார்; அவரைச் சில சொற்களுக்குப் பொருள் கேட்டார். கவிரர்சர் பொருளறியாமல் மயங்கினர். குமாரதேவர் வழி நடந்தார். கவிராசர் தம்மையாட்கொள்ள வந்த குருவென எண்ணி அவரைப் பின் தொடர்ந்தார். இரவெலாம் நடந்து இருவரும் சாந்தலிங்க அடிகளாரின் திருமடத்தைக் குறுகினர், புலரும் காலமாயினமையின் குமார தேவர் மடத்தின் முன்றிலை மெழுகினர்; கவிராசர் அலகிட்டார். அடிகளாரைக் காணக் காத்திருந்தனர். சாந்தலிங்கர் வெளியே வர, குமாரதேவர் கவிராசரை ஏற்றருள வேண்டு

மென்று விண்ணப்பித்தார். சாந்தலிங்கர், கவிராசரின் பக்குவ நிலையை யறிந்து குமார தேவரே அவரை மாணவராகக் கொள்ளலாம் என்று சொன்னார். ஆணையின் வண்ணம் நடக்க எண்ணிய இருவரும் மீண்டும் திரு முதுகுன்றம் வந்தனர்.

சிலகாலம் கழித்து இருவரும் மேலைச் சிதம்பரம் என்னும் திருப்பேரூரில் தங்கி யிருந்த சாந்தலிங்க சுவாமிகளைக் காணச் சென்றனர். அடிகளார் தாம் இயற்றிய கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்ற நூல்களுக்கும், கண்ணுடைய வள்ளலார் அருளிய ஒழிவிலொடுக்கம் என்ற நூலுக்கும் உரை எழுதும்படி கவிராசரைப் பணித்தார். விருத்தாசலம் மீண்டுவந்து சிதம்பர கவி ராசர் ஐந்து நூற்களுக்கும் உரைவரைந்து முடித்துப் பேரூர் சென்று அடிகளாரிடம் கொடுத்தார். அவரும் உரைகளின் மேன்மை கண்டு கழிபேருவகை கொண்டார். அவ் வுரைகளைக் கற்பவர்க்கு கவிராசரின் நுண் மாண் நுழைபுலம் தெள்ளிதின் விளங்கும்.

குருவருள் பூரணமாகப் பெற்ற சிதம்பர சுவாமிகளுக்கு ஒருநாள் முருகனுடைய மயில் காட்சி கிடைத்தது; அதை ஆசிரியப் பெருந் தகையாருக்கு அறிவித்தார்கள். குமாரதேவர் அதன் உண்மையை உணர்ந்து சிதம்பர சுவாமிகளைத் திருப்போரூர் சென்று முருகன் கோயில் திருப்பணியை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டனர். மறுத்தற்கஞ்சிய சிதம்பர சுவாமிகள் அவ்வூர் நோக்கிப் புறப்பட்டார்.

வழியிலுள்ள இளியனூரில் ஞானம்மை யார் என்ற ஒருவர் அளித்த கூழ் அமுதை உண்டு மகிழ்ந்தார். பின்னர், பொம்மைய பாளையம் மடத்தில் எழுந்தருளியிருந்த சிவ ஞானபாலய சுவாமிகளுடன் அளவளாவி உணவுங்கொண்டிருந்தனர். பிறகு திருப் போரூரை அடைந்தார்.

ஒரு பனைமரத்தின் அடியில் வேலன் திருவுருவம் கிடக்கக் கண்டார். முருகப் பெருமான், குமாரதேவர்போல் தோன்றி முன்னர் கோயில் இருந்த இடத்தைக்காட்டி மறைந்தார். அவ்விடத்திலேயே கோயில் திருப்பணியைச் சுவாமிகள் தொடங்கினார் கள்; பல அற்புதங்கள் நிகழ்த்தி மக்களை தம் வயப்படுத்தினார்கள். திருப்பணிக்கு வேண்டிய பொருள் சேர்ந்து அதுவும் நிறைவெய்தியது.

பின்னர், சுவாமிகள் திருப்போரூருக்கு வடபால் உள்ள கண்ணுவப்பேட்டையில் கோயில், குளம் தனியே அமைத்து, அங் கிருந்துகொண்டே திருப்போரூர் முருகன் கோவில் பூசனைகளைக் கவனித்து வந்தார்கள். சுவாமிகள் முருகன்மேல் இயற்றிய பாடல் களின் தொகுதியே 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்பது. பாடல்கள் பக்திச்சுவை மிக்கன; படிப்பவர் மனதைப் பரவசப்படுத்து வன. இன்னும் சுவாமிகள், திருக்கழுக் குன்றத்து வேதகிரீசர் பதிகம், குமாரதேவர் பதிகம், குமாரதேவர் நெஞ்சு விடுதூது, பஞ்சதிகாரவிளக்கம் என்ற நூல்களையும் இயற்றியருளினர். இளியனூர் ஞானம்மை யாரின் வேண்டுகோளின்படி "புணர்ப்ப தொக்க எந்தை என்னை" என்று தொடங்கும் திருவாசகப் பாடலுக்கு உரை கண்டனர் என்பர்.

பூவிருந்தவல்லிக்கு அடுத்த கோவூரிலி ருந்து சிவசங்கர முதலியார் வந்து சுவாமிகள் மாணவராக இருந்து கோயிற்பணிகளை நடத்தி வந்தார். திருவண்ணாமலையிலிருந்து வந்த சோணாசலதேவர் என்பவரும் சுவாமி களின் அருளுக்குப் பாத்திரமானார். கோயில், மடம் முதலியவைகளை சிவசங்கரர்பால் ஒப்பு வித்து வைகாசி விசாகமும் பூரணையும் கூடிய ஒரு நன்னாளிலே கலைஞானமும் சிவஞானமும் ஒருங்கே யமையப் பெற்ற தவஞானியான சிதம்பரசுவாமிகள் நிரதிசயானந்த சுமாதி யில் ஒடுக்கமுற்று நின்றருளினார்கள்.

"பேயன் பிழையையும் பித்தன் பிழையையும்
பேசரிய
சேயின் பிழையையும் தேரார் பெரியர் சிறிய
புன்மை
நாயன் பிழைதனை நீ பொறுத் தாளுதி
நாயகமே
மாயன் திருமரு காசம ராபுரிவானவனே

—சிதம்பரசுவாமிகள்.

# ஆழ்வார்கள் பாடிய திருக்கோயில்கள்

(மலைநாடு)

(மஹாவித்வான்-காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள்)

இக்கிலவுலகின்கண் விஷ்ணுவாலயங்கள் எண்ணிறந்தவையிருந்தாலும் ஆழ்வார்களின் பாடல்பெற்ற தலங்களுக்கே சிறப்புள்ளது. அவையே திருப்பதிகளென்றும் திவ்ய தேசங்களென்றும் வழங்கப்பெறும். .........பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையைய னருள்மாறன் சேரலர் கோன் துய்யப்பட்ட நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நன்கலியன்.........என்னப்பட்ட ஆழ்வார்கள் பதின்மரும் பாடிய ஏற்றம் பெற்ற திருப்பதி திருவரங்கம் பெரிய கோயில் என்னுமதொன்றேயாம். தொண்டரடிப் பொடியாழ்வாரொருவர் நீங்கலாக மற்றை யொன்பதின்மர் பாடிய ஏற்றம் பெற்ற திருக்கோயில் திருவேங்கடமலை யொன்றேயாம். மற்றைக்கோயில்கள் ஒருவர் பாடியவை, இருவர் பாடினவை, மூவர் பாடினவை, நால்வர் பாடினவை...என்றிங்ஙனே கூறத்தக்கவையாகவுள. யாரேனுமோராழ்வாருடைய திருவாக்கில் ஒரு விசை புகுந்து புறப்பட்டாலும் திவ்யதேசமென்கைக்குப் போதுமானது. உறையூர், உத்தமர் கோயில், அன்பில், ஆதனூர், கண்டியூர் ...என்னும் திருத்தலங்கள் இத்தகையனவே.

பிள்ளைப்பெருமாளையங்கார்பாடிய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் "ஈரிருபதாஞ் சோழ மீரொன்பதாம் பாண்டி, ஓர் பதின் மூன்றாமலை நாடோரிரண்டாம்—சீர்நடுநா, டாறோடீரெட்டுத் தொண்டையவ்வட நாடா திரண்டு, கூறுதிருநாடொன்றாக் கொள்" என்னுஞ் செய்யுளினால் திருப்பதிகளின் வகை கூறப்பட்டுள்ளது. சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பது; பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு;மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று; நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு; தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு; வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டு; பரமதமென்னுந் திருநாடு ஒன்று. ஆக வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டு எனப்படுகின்றன.

இப்போது நாம் மலைநாட்டுத் திருப்பதிகளைப் பற்றி அநுபவரூபமாகப் பேசவெழுகின்றோம்.

**மலைநாட்டுத் திருப்பதிகள்:** மலையாளம் என வழங்கப்படுகின்ற தேசமே மலைநாடென்பது. ஒரு புறம் மலைபோல் மேடாகவும், மற்றொருபுறம் ஆழமான பள்ளமாகவும் காணப்படுதலால் இத்தேசம் மலையாழம் என வழங்கப்பெற்று, நாளடைவில் மலையாளமாயிற்றென்பர். மலைநாட்டில் ஆழ்வார்கள் பாடிய திருத்தலங்கள் பதின்மூன்றென்று சொன்னோம். நம்மாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவரே மலைநாட்டுத் திருப்பதிகளில் திருவாக்கைச் செலுத்தினவர்கள். குலசேகராழ்வார் திருவித்துவக்கோடு என்னும் ஒரு திருப்பதியை மட்டுமே [பதிகமொன்றால்] பாடியவர். திருமங்கையாழ்வார், திருவல்லவாழ் திருமூழிக்களம் திருநாவாய் என்னும் திருப்பதிகள் மூன்றைமட்டுமே பாடியவர். சிறிய திருமடலில் "பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்" என்ற விடத்துத் திருப்புலியூரென்றது சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான சிறுபுலியூரை யென்று கொள்ளாமல் குட்டநாட்டுத் திருப்புலியூரையென்று கொண்டால் திருமங்கையாழ்வார் பாடிய மலைநாட்டுத் திருப்பதிகள் நான்கென்று தேறும். இவற்றுள் திருவல்லவாழ் என்னும் திருப்பதியொன்றுக்கே இவர் பதிகம் பாடியுள்ளார். நம்மாழ்வார் திருவித்துவக்கோடொன்று நீங்கலாக மற்றைத் திருப்பதிகள் பன்னிரண்டையும் பாடியவர். இவற்றுள் திருவண்பரிசாரமொன்று நீங்கலாக மற்றைத் திருப்பதிகள் பதினொன்றுக்கும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார். திருவாய்மொழியில் எட்டாம் பத்தில்......அங்குமிங்கும் வானவர் தானவர்......என்னும் பதிகத்தில் ஒரு பாசுரத்

தில் மட்டுமே திருவண்பரிசாரமென்று தலத்தின் திருப்பெயர் காணப்பட்டாலும் இப்பதிகம் முழுதுமே திருவண்பரிசாரப்பாடல் என்பது ஆசார்யஹ்ருதய மென்னும் திவ்விய நூலையருளிச் செய்த பேராசிரியரின் திருவுள்ளம்.

மலைநாட்டுத் திருப்பதிகள் நான்கு பகுதிகளில் விளங்குகின்றன. பட்டாம்பி அல்லது ஷோரணூரைச் சார்ந்த பகுதியில் திருவித்துவக்கோடு திருநாவாயுமுளளன. எரணு குலத்தைச் சார்ந்த பகுதியில் திருமூழிக்களமும் திருக்காட்கரையுமுள்ளன. திருச்செங்குன்றூரைச் சார்ந்த பகுதியில், திருக்கடித்தானம் திருப்புலியூர் திருவண்வண்டூர் திருவல்லவாழ் திருச்சிற்றாறு திருவாறன்விளை ஆகிய ஆறு திருப்பதிகள் உள்ளன. திருவனந்தபுரம் திருவாட்டாறு திருவண்பரிசாரம் இவை மூன்றும் ஒரு பகுதியாகவுள்ளன. கோயம்புத்தூர் பாலக்காடு ஷோரணூர் வழியாகச் சென்றால் முதலில் திருவித்துவக்கோடு சேவிக்க ப்ராப்தமாகும். திருநெல்வேலி நாகர்கோவில் வழியாகச் சென்றால் முதலில் திருவண்பரிசாரம் சேவிக்க ப்ராப்தமாகும். இப்போது நாம் இத்திருப்பதிகளின் அனுபவத்தைத் திருவித்துவக்கோடு முதலாகச் செய்வோம். இத்தலத்தைத் திருமிற்றக் கோடென்றே மலைநாட்டினர் வழங்குவர். திருவித்துவக் கோடு, திருவிற்றுவக்கோடு என்பன பிரதி பேதங்கள்.

## திருவித்துவக்கோடு

இத்தலத்தைக் குலசேகராழ்வாரொருவரே பாடியுள்ளாரென்று கூறினோம். அவ்வாழ்வாருடைய திவ்வியப் பிரபந்தமாகிய பெருமாள் திருமொழியில் ஐந்தாம்பதிகம்... தருதுயரம் தடாயேல்......என்பது இத்தலத்தைப் பாடியதாம். இப்பதிகந்தன்னில் ஆழ்வார் உபகரித்தருளிய விசேஷங்களை அநுபவிப்போமிங்கு.

வைணவ சம்பிரதாயத்தில் திவ்வியப் பிரபந்தங்களுக்கு ஏற்றம் எதனாலென்னில்; அஷ்டாக்ஷமஹா மந்த்ரம், த்வயம் என்னும் மந்த்ர ரத்னம், கண்ணபிரான் பாரதப் போர்த் தொடக்கத்தில் திருத்தேர்த்தட்டில் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதையின் ஸாரமாகிய.........ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ........என்கிற சரமச்லோகம் ஆகிய இம்மூன்று ரஹஸ்யங்களின் சீரிய பொருள்களை வெளியிடுவதனாலேயே யென்று பூருவாசாரியர்களின் கொள்கை. அப்பொருள்களில், நாம் பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்பதும் ஒரு பொருள். இதனை விவரித்துக் கூறுமிடத்து அவ்வடிமை எப்படிப்பட்டதென்னில், பகவானொருவன் தவிர வேறு எவர்க்கும் உரித்தல்லாதபடி அவனுக்கே அற்றுத்தீருகை யென்றும், அவன் நமக்கு ஸம்பத்துக்களைக் கொடாமல் விபத்துக்களையே கொடுத்தாலுங்கூட அவ்வடிமை யுணர்ச்சிக்குக் கெடுதல் விளைத்துக் கொள்ளலாகாதென்றும் பரிஷ்காரப்படுத்திப் பேசுகின்றார்கள் பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசாரியார் போன்ற பரமாசாரியர்கள். இத்தகைய விசேடப் பொருள்களை யெல்லாம் நாம் இப்பதிகமொன்றில்தான் காணமுடியும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொருதாரணம் காட்டி நிரூபித்திருக்கும் வகை சிகரற்றது. அவ்வகையைச் சிறிது விவரிப்போமாக.

1. "வித்துவக் கோட்டம்மா!, அரிசினத்தாலீன்றதாய், அகற்றிடினும் மற்றவள் தனருள் நினைந்தே அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே" என்கிறார் முதற்பாட்டில். பெற்ற தாயானவள் மிக்க கோபங்கொண்டு அதனால் தனது குழந்தையை வெறுத்துத் தள்ளினாலும் அக்குழந்தையானது தாயினுடைய கருணையையே நினைந்து அவளது காலைக் கட்டிக்கொண்டே யழுவதுபோல என்று இங்குக் கூறப்பட்ட உவமை. எம்பெருமானே! என்னை நீ மாறி மாறிப் பல பிறப்பும் பிறக்கும்படி செய்து உன்னடிப்போது நானணுகாவகை செய்து உபேக்ஷித்துப் போந்தாலும் எனக்கு உன்னை யொழிய வேறுகதியில்லாமையால் உனது திருவடிகளை விட்டு விலககில்லேன் என்று கூறி முடித்தாரிதில். இங்குத் தாய்க்குழவி த்ருஷ்டாந்தம் கூறினது-குழந்தையை அணைக்கவும் அடிக்கவும் பெற்ற தாய்க்கு உரிமையிருப்பது போல, ரக்ஷிப்பதற்கும் உபேக்ஷிப்பதற்கும் அவன்றனக்கு உரிமையுண்டு என்பதைக் காட்டுதற்கென்க. தாய் எது செய்தாலும் குழந்தையின் துணிபு மாறாதாப்போலே தம்

துணிபும் மாருதென்பதும் காட்டப்பட்டதாம்.

2. இரண்டாம் பாட்டில் “ கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்” என்று நற்குலப் பிறப்பும் நன்னடையொழுக்கமுங் கொண்ட ஒரு பதிவிரதையை உவமை கூறி, வித்துவக்கோட்டம்மானே! என்னை அடிமை கொண்ட நீ சிறிதும் தலைக்காட்டாமல் உபேட்சித்தாயாகிலும் உனது திருவடிகளையே சரணமாகக் குறிக் கொள்வேனத்தனை என்றார். நற்குலப் பிறப்பும் நன்னடை யொழுக்கமுமற்ற தீய பெண்டிர் தங்களுக்குக் கணவன் எவ்வளவு இனிமையான காரியங்களையே செய்து போந்தாலும் அவனை மதியாது வெறுத்திருப்பர்கள். நற்குலத்துப் பிறந்த நல்ல மகளோவெனில், தனக்குக் கணவன் பொறுக்கொணாத் துன்பங்களை யிழைத்தாலும் எதிரில் வாய்கூடத் திறவாமலும், வேறு கதியை நாடாமலும் முன்பு அவன் செய்த நன்றி நலங்களையே நினைத்து மற்றும் அவனால் உதவிகளைப் பெற நாடி அவன் காலருகிலேயே விழுந்து கிடப்பள். அது போலப் பற்பல பேர் உனது நிர்ஹேதுக ஸ்வீகாரத்தையும் உதறித் தள்ளிவிட்டு அற்ப பலன்களை விரும்பி அற்பர்களை நாடியோடினாலும், நீ என் பக்கல் நிக்ரகம்பண்ணினாலுங்கூட உன்னை யல்லது வேறொரு புகலிடமறியேனென்று நிரூபித்தாராகிறார்.

(தொடரும்.)

---

## இந்துமத அறநிலையப் பரதுகாப்புத்துறை, சென்னை

### அறிக்கை எண் 6161/1959 (ஏ-6) தேதி 25-2-59

சிகப்பு வண்ண நூல் சுற்றப்பட்ட ரோஜா மலர் மாலைகளை உபயோகப் படுத்துதலைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும் என்பதை ஆலய அதிகாரிகளுக்கும், இலாகா அதிகாரிகளுக்கும் பன்முறை உணர்த்தப்பட்டிருக்கிறது; ஆனாலும் வண்ண நூல்கள் சுற்றப்பட்ட மலர் மாலைகளைப் பயன்படுத்தும் வழக்கம் இன்னும் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆலய நிர்வாக அதிகாரிகளையும் இலாகா அதிகாரிகளையும், சிகப்பு வண்ண நூல் சுற்றப்பட்ட ரோஜா மலர் மாலைகளை, கோயில்களில் சிலைகளுக்கோ, முக்கியமான பார்வையாளர்களை வரவேற்பதற்கோ அறவே பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. சிகப்பு வண்ண நூல் சுற்றப் பெறாத புதிய ரோஜா மலர் மாலைகள் கிடைப்பது அரிதானால், வண்ண நூல்கள் சுற்றப் பெறாத மற்ற மலர் மாலைகளைப் பயன்படுத்துவது போதுமானதாகும். கோயில்களில் மலர்மாலைகளுக்கு வண்ண நூல்களை எக்காரணம் பற்றியும் பயன்படுத்தக் கூடாது.

கோயில்களில், முக்கியமான பார்வையாளர்களை வரவேற்பதற்குப் பூச்செண்டுகளை எக்காரணம் பற்றியும் பயன்படுத்தக் கூடாது.

# திருமயிலை

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்

—திருஞானசம்பந்தர்.

சென்னைமாநகரைத் திகழவைப்பவை இருபெருங் கோயில்கள். ஒன்று ஆழ்வார்களால் மங்கள சாசனம் பெற்ற திருவல்லிக்கேணி யென்னும் திவ்விய தேசம்; மற்றொன்று தேவாரப்பாடல் பெற்ற பழம்பதியான திருமயிலை. தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டில் ஒன்று மயிலைமாநகர். சாதாரணமாக வழங்கும் பெயர் மயிலாப்பூர் என்பது; கோயில் இருக்குமிடம் கபாலீச்சரம். பிரமன் அகந்தையொழிக்க சிவபெருமான் அவனுடைய ஒரு தலையைக் கொய்து கையில் ஏந்தினார். கபாலத்தை ஏந்தியதால் கபாலி என்றும், கபாலி ஈசுவரர் என்றும், பிரமன், சிவபெருமானை இங்கு வழிபட்டதால் இப்பதிக்கு **கபாலீச்சரம்** என்ற பெயர் உண்டாயிற்றென்றும் புராணம் கூறுகிறது. உமாதேவியார் **மயில்** உருவத்தில் இறைவனைப் பூசித்து தமது சுயரூபம் பெற்று அப்பெருமானைத் திருமணம் செய்துகொண்டதால் **மயிலாப்பூர்** என்ற பெயர் உண்டாயிற்று. 'மடமயிலைக்கட்டு இட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்' என்று தேவாரப் பாசுரம் கூறும். மயிலை, மாமயிலை, மயிலைப்பதி, மயிலைநகர், மயிலைமாநகர், மயிலாபுரி என்று தேவாரம், திருப்புகழ், திவ்வியப் பிரபந்தம் முதலிய நூல்களில் இத்தலத்தின் பெயர்களாகக் காணப்படுகின்றன. மயிலாப்பூர் என்பது **மயிலாப்பு** என்று முற்காலத்தில் வழங்கப்பெற்றது என்பது தொல்காப்பியத்தில் 'மயிலாப்பிற் கொற்றன்' என்ற ஆட்சியிலிருந்து தெரிகிறது. திருநாவுக்கரசர் இத்தலத்தைப்பற்றித் தனிப்பதிகம் பாடவில்லையாயினும் வேறு தலங்களைப்பற்றி அருளிய திருப்பதிகங்களில் கீழ்க்காணுமாறு கூறியுள்ளார்:

"மங்குன் மதிதவழும் மாடவீதி
மயிலாப்பிலுள்ளார்"
"மயிலாப்பின் மன்னினர்"
"மயிலாப்புள்ளே செடிபடு வெண்தலையொன்
றேந்திவந்து."

மயிலாப்பூர், மயிலாப்பு என்ற பெயர்களே மருவி, மயிலை என்றாயிற்று.

இத்தலம் மிகத் தொன்மை வாய்ந்தது. மிகப் பழைய தமிழ் நூலான தொல்காப்பியத்தில் மயிலாப்பு என்று பயின்றிருப்பது மேலே காட்டப்பட்டது. இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்னர் இருந்த திருஞானசம்பந்தர் இப்பதியைப்பற்றி ஒரு பதிகம் அருளியுள்ளார். அப்பர் திருத்தாண்டகங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் '**தொன் மயிலை** வாயிலான் அடியார்க்கும் அடியேன்' என்று பழைமையான மயிலாப்பூர் என்று கூறுகிறார். 'பன்னு தொல்புகழ்த் திருமயிலாபுரிப் பதி' என்று சேக்கிழார் சொல்கிறார். ஆனால் இப்பொழுதுள்ள கோயில் பழைய கோயில் அன்றென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பழைய திருக்கோயில் கடற்கரையருகே இப்போது சாந்தோம் மாதாகோயில் (Santhome Cathedral) இருக்குமிடத்தில் இருந்ததென்றும், பதினாறும் நூற்றாண்டில் போர்த்துகீசியர் கைபற்றிக் கோயிலைத் தகர்த்துவிட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. இப்போதுள்ள கோயில் சுமார் 300 ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்டது. கடற்கரைப்பதிகளான திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, திருவான்மியூர் முதலியவிடங்களிலுள்ள கோயில்களில் பழைய கல்வெட்டுக்



சம்பந்தர்
எலும்பைப் பெண்ணாக்கல்

உமாதேவியார்
மயில் உருவத்தில் பூசை செய்தல்

வாயிலார் நாயனார்
மனக்கோயிலில் இறைவனை வழிபடல்

சடைமேல்' என்று தொடங்கும் திருத்தாண் டகத்தில் 'கல்லாடை புனைந்தருளும் காபா லியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே' என்று அவர் கூறியிருப்பது இத் தலத்தின் இறைவன் இறைவிக்குப் பொருந்து மாறு இருக்கின்றது. சுந்தரர் திருத்தொண் டத் தொகையில் 'தொன்மயிலை' என்று குறிக்கிறார். ஐயடிகள் காடவர்கோன் நாயனார்,

'குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை யங்காந் திளைத்து'

என்று க்ஷேத்திரத் திருவெண்பாவில் பாடி யிருக்கின்றார். சேக்கிழார் இப்பதியைப் பல படப் புகழ்கின்றார். 'மாடம் ஓங்கிய மயிலை மாநகர்', 'பழுதில் புகழ்த் திருமயிலைப்பதி', 'மருவாரும் மலர்ச்சோலை மயிலாப்பூர்' என விதந்தோதுகிறார். அவரே, வாயிலார் நாயனார் புராணத்தில்,

'சொல்விளங்கு சீர்த்தொண்டை நன்னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெருங் குடிநீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயி லாபுரி'

என்று பாராட்டுகிறார். 'தேனமர் சோலை மாட மாமயிலைத் திருவல்லிக்கேணி கண்டேனே' என்று திருமங்கையாழ்வாரும், 'நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்' என்று திருமழிசையாழ்வாரும் இருபெரும் பதிகளை ஒருங்கே அமைத்துப் பாடியருளு கின்றனர். அருணகிரிநாதர் இத்தலத்தைப் பற்றிப் பன்னிரண்டு திருப்புகழ்ப் பாடல் களைப் பாடி யிருக்கின்றார். 'மணி செய்மாட மாமேடை சிகரமோடு வாகான மயிலை மேவி வாழ்தேவர் பெருமாளே' என்று ஒரு பாட லில் அழகாக எடுத்துரைக்கின்றார்.

திருவண்ணாமலை ஆதீனத்து அமிர்த லிங்கத் தம்பிரான் சுவாமிகள் என்பார் இயற் றிய தலபுராணம் ஒன்றுள்ளது. அதில் திரு மயிலையின் தோற்றம், முருகன், பிரமன், சுக்கிரன், முதலியோர் வழிபட்டுப் பேறு பெற் றது முதலியவைகள் கூறப்பட்டிருக்கிறது. அதன் பிறகு, திருமயிலை நாதமுனி முதலியார் என்பவர் வடமொழி நூலைத் தழுவி ஒரு தல



அறுபத்துமூவர் திருவுலா

புராணம் பாடியுள்ளார். அதில் திருவள்ளுவர், வாயிலார் நாயனார் வரலாறுகள் கூறப்பட்டிருப்பது முன்னைய தல புராணத்தில் இல்லாதவை. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இத்தலத்திற்குப் புராணம் எழுதத் தொடங்கிச் சில பகுதிகளை யியற்றினார் என்றும், அப்பகுதிகளும் இப்போது கிடைக்கவில்லை யென்றும் கூறப்படுகிறது.

திருமயிலை உலா, திருமயிலைக் கலம்பகம், தொட்டிக்கலை நாராயணசாமி முதலியார் இயற்றிய திருமயிலை வெண்பாமாலை, கபாலீசர் பஞ்சரத்தினம், கற்பகவல்லிமாலை, அம்பலவாண கவிராயர் யாத்த சிங்காரவேலர் கோவை, தாண்டவராய கவிராயர் பாடிய திருமயிலை யமக அந்தாதி, சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ், சிங்காரவேலர் வெண்பா முதலியன இத்தலத்தைப்பற்றி எழுந்த நூல்களே. கருவம்பாக்கம் ஆறுமுக முதலியார் என்பவர் இயற்றிய பூம்பாவையார் விலாசம் என்ற நாடகமும் இப்பதியைப்பற்றியதே.

வெள்ளீசுவரர், கர்ரணீசுவரர், ஆதிகேசவப்பெருமாள், மாதவப் பெருமாள் கோயில்களும், பேயாழ்வார் அவதாரம் செய்த இடமும் இத்தலத்தை அழகு செய்கின்றன. உலகப் பொதுமறையான திருக்குறளை அளித்த திருவள்ளுவர் திருக்கோயிலும் கபாலீச்சரத்தின் வடக்கே சற்றுத் தொலைவில் அமைந்திருப்பது பெருமைப்படத்தக்கதொன்றாகும்.

கொங்குலா மலர்க்குழலும் பிறைநுதலும்
கயல்விழியும் குமுதவாயும்
சங்கமா மணிமிடறும் கழைப்புயமும்
மலர்க்கரமும் தரளமாலைத்
துங்கமா கிரிகுயமும் கொடி யிடையும்
பதும அடித் துணையும் உள்ள
எங்கள்நா யகியைஎழில் மயிலையின்கற்
பகக்கொடியை இறைஞ்சி வாழ்வாம்.

---


## செய்திகள்

**11—2—59** அம்பல் ஸ்ரீ பிரம்பபுரிசுரர் கோயிலில் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்ட "திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்களை" அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு A. உத்தண்டராமபிள்ளை, I. A. S., அவர்கள் திறந்து வைத்து தலைமை உரை யாற்றினார்கள். நன்னிலம் தமிழாசிரியர் திரு. சாமிநாதன் அவர்கள் "ஞானத்தின் திருஉரு" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள். நன்றி நவிலலுடன் விழா இனிது முடிந்தது.

---

## சென்னை ஸ்ரீ காமகலா காமேஸ்வர தேவஸ்தானத்தில் பன்னிரு திருமுறைக் கோயில் பிரதிஷ்டை

**15—2—59** ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. A. உத்தண்டராம பிள்ளை I. A. S., அவர்கள் பன்னிரு திருமுறைகளைப்பற்றி விளக்க உரையாற்றினார்கள். திருமுறைக் கோயிலைப் பன்னிரு திருமுறை படனத்துடன் ஆலயத்தை வலம் வரச்செய்து பிரதிஷ்டை செய்தார்கள். பன்னிரு திருமுறை படனம் சங்கீத பூஷணம் தருமபுரம் திரு. பி. சாமிநாதன் அவர்களால் இன்னிசையுடன் நடைபெற்றது. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார வித்வான் திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் முதலியோர் விழாவில் கலந்து கொண்டார்கள்.



# திருஅல்லிக்கேணி

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள
வெண்முத்தம்
அந்திவிளக்கு மணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்
திருவல்லிக் கேணியான் சென்று

—பேயாழ்வார்.

தாளாலுலக மளந்த வசவே கொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத்தணை

—திருமழிசையாழ்வார்.

உலகத்தில் உள்ள உயிர்கள் உய்யும் வண்ணம் இறைவன் எழுந்தருளியுள்ள கோயில்கள் இருக்கும் பதிகள் நம் நாட்டிடை எண்ணிலவாகும். அவைகளில் சைவ வைணவ அடியார்கள் பாடிப்பரவிய பதிகளே மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. நம் மாநிலத்தின் தலைநகரான சென்னையை அழகு செய்வன இருபெருங் கோயில்கள்; அவை திருஅல்லிக்கேணி, திருமயிலை என்பன. தொண்டைநாட்டில் ஆழ்வார்களால் மங்கள சாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களில் ஒன்று திருஅல்லிக்கேணி என்னும் திருநகர். தற்காலத்தில் திருவல்லிக்கேணியென்றும், ஆங்கிலத்தில் Triplicane என்றும் வழங்கி வருகிறது. இப்பதி, 'தேனமர் சோலை மாடமாமயிலை'க்கு வடக்கிலும், கடற்கரைக்கு மேற்கே அரைகல் தொலைவிலும் இருக்கிறது. இதற்கு, பிருந்தாரண்யம், துளசிவனம் என்ற வடமொழிப் பெயர்கள் உண்டு. இங்கு பிர

தான மூர்த்தியாக எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமத்தை யொட்டியே **பார்த்த சாரதி சுவாமி கோயில்** என்று மக்களால் அழைக்கப்படுகிறது.

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. முன்னால் 'கைரவிணி' என்னும் புராணப் பிரசித்தமான புஷ்கரிணி இருக்கின்றது. இதில் தண்ணீர் எக்காலத்தும் வற்றுவதில்லையென்றும், மீன்கள் உயிர்வாழ்வதில்லையென்றும் கூறப்படுகிறது. இதற்கு மேற்கே அழகிய பதினாறுகால் மண்டபம் அமைந்திருக்கிறது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் பலிபீடம், கொடிமரம், கருடன் சந்நிதி இவைகள் இருக்கின்றன. பிறகு தொண்டரடிப்பொடி வாசல்வழியே நுழைந்து இடதுகைப் புறம் திரும்பிப் பிரகாரத்தை வலம் வருகிறோம். தெற்குப் பிரகாரத்தில் கிழக்குநோக்கி வேதவல்லித் தாயார் சந்நிதி இருக்கிறது. தாயாரை சேவித்துவிட்டுச் சென்றால் 'ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டானை' என்ற ஆழ்வார் பாசுரத்தின்படி எழுந்தருளியுள்ள கருடாரூடரான கஜேந்திர வரதரைச் சேவிக்கிறோம். இவரை வலம் வந்தபின், மேற்குத் திருமுக மண்டலத்துடன் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் யோக நரசிம்மர் சந்நிதியிருக்கிறது. இவரைத் **தெள்ளிய சிங்கர்** என மங்களசாசனம் செய்யப் பெற்றிருக்கிறது. உற்சவமூர்த்தியை **அழகிய சிங்கர்** என்பர். மகாமண்டபத்தின் இடதுகைப்பக்கம் திருமழிசையாழ்வார் சந்நிதியிருக்கிறது. அழகியசிங்கரின் வெளிப்பிரகாரத்தில் அவருக்கெனத் தனியே கொடிமரம், பலிபீடம், கருடன் சந்நிதி முதலியவை இருக்கின்றன. மறுபடியும் உள்ளேவந்து வடகோடியில் உள்ள ஆண்டாள் சந்நிதியைப் பார்க்கலாம். சூடிக்கொடுத்தசுடர்க்கொடியை வணங்கி வரும்போது **ஆனந்த விமானம்** தோன்றுவதைக் காணலாம். வடக்குப் பிரகாரத்தைத் தாண்டி கிழக்கே வந்து மேற்கே நுழைந்து திருவாய்மொழி மண்டபத்தை அடைகிறோம். அங்கிருந்து பார்த்தசாரதியின் சேவை கண்கொள்ளாக் காட்சியாகும். மூலவர் திருநாமம் **வேங்கடகிருஷ்ணன்** என்றும், உற்சவ மூர்த்தியின் திருப்பெயர் **பார்த்தசாரதி** என்றும் கூறுவர். நின்றகோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கிறார். வலது கையில் திருச்சங்கும், இடதுகை வரத அஸ்தமாயும் இருக்கின்றன. பெருமாளின் வலது பக்கத்தில் ருக்மணிப் பிராட்டியும், பலராமரும், இடதுபுறம் சாத்யகி, பிரத்யும்னன், அநிருத்தன் இவர்கள் எழுந்தருளியுள்ளனர். கண்ணன் குடும்பசகிதமாய், பஞ்சவீரர்களாய்க் காட்சியளிப்பது இந்தக் கோயிலில்தான் என்பது இப்பதிக்குப் பெருமை தருகிறது.


பார்த்தசாரதிக்கு வடபால் மன்னாதன் சந்நிதியிருக்கிறது; பெருமாள் புஜங்க சயனத்திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் விளங்குகிறார்; மலர்மகளும், நிலமகளும் அருகே அமர்ந்துள்ளனர். இந்த சந்நிதிக்கருகே சக்கரவர்த்தி திருமகன் சந்நிதி இருக்கிறது. இராமர், சீதை, இலக்குவன், பரதன், சத்துருக்கனன் இவர்களுடன் தெற்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். 'பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமணனோடு மைதிலியும்' என்ற பாசுரப்பகுதி குறிக்கத்தக்கது. மற்றும் எல்லா ஆழ்வார்களுக்கும், வைணவ ஆசாரியர்களுக்கும் இக்கோயிலில் சந்நிதிகள் உள்ளன.

இக்கோயிலில் எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பார்த்தசாரதி சுவாமிக்கு சித்திரையில் பிரம்மோற்சவமும், ஆண்டாளுக்கு ஆடியில் பூர உற்சவமும், மார்கழியில் பகல் பத்து, இராப் பத்து உற்சவமும், மாசியில் தெப்பமும், மகத்தில் பெருமாள் கருடவாகனத்தில் எழுந்தருளிக் கடற்கரைக்குச் சென்று தீர்த்தம் சாதித்தலும் ஆகிய திருவிழாக்கள் மிகச்சிறந்தவை.

இந்த திவ்விய தேசத்தைப்பற்றி வடமொழியில் **பிருந்தாரண்ய க்ஷேத்திர மகாத்மியம்** என்ற நூல் ஒன்று இருக்கிறது. பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் இம் மூவரும் மங்கள சாசனம் செய்தருளியிருக்கின்றனர். பேயாழ்வார் பாடிய ஒரு பாசுரத்தில், அலைகளால் ஒதுங்கிய சிவந்த பவளங்களும், வெண்முத்துக்களும் இப்பதிக்கு அந்தி விளக்காக அணி செய்கின்றன என்று கூறுகிறார். திருமழிசையாழ்வார் ஒரு பாடல் அருளியுள்ளார். பார்த்தசாரதி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிப்பது தவிர, நாகத்தணைமேல் கிடந்த பெருமா

ஞுக்கவும் சேவை சாதிப்பதில் ஈடுபடுகிறார். திருமங்கை மன்னன் இப்பதிக்குப் பத்துப் பாசுரங்கள் பெரிய திருமொழியில் கூறியுள்ளார். முதல் பாடலில், 'பற்றலர் வீயக்கோல் கையில்கொண்டு பார்த்தன் தன் தேர்முன் நின்றானை' என்று குறிக்கிறார். இரண்டாம் பாசுரத்தில் 'வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை விழுமிய முனிவர் விழுங்கும், கோதிலின் கனியை... குவலயத்தோர் தொழுதேத்தும் ஆதியை அமுதை' என்றெல்லாம் கூறியிருப்பது சுவைத்தின்புறத் தக்கது. மூன்றாம் செய்யுளில், வஞ்சகியின் நஞ்சமுதுண்டு அவளைக் கொன்றதும், விஞ்சையர்க்காகப் பெண்ணுருவாகி அஞ்சுவை அமுதம் வழங்கியதும் சொல்லப்படுகிறது. ஆயர்களையும், ஆநிரைகளையும் காப்பதற்காகக் கோவர்த்தனகிரியைக் குடையாய்ப் பிடித்து மழையைத் தடுத்ததும் நாலாம் பாட்டில் காணப்படுகிறது. பஞ்சபாண்டவர்க்காகத் தூதுசென்றதும், பாரதப்போரில் பார்த்தனுக்குத் தேரோட்டியாக நின்றதும் ஐந்து, ஆறும் பாசுரங்களில் ஓதப்படுகின்றன. ஏழாம் பாசுரத்தில் இராமாவதாரச் சிறப்பு கூறப்படுகின்றது. 'குரவமே கமழும் குளிர் பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணி' என்ற இயற்கை வருணனை மிக அழகுபடவுள்ளது. எட்டாம் செய்யுளில் நரசிம்ம அவதாரத்தைப் பற்றியும், ஒன்பதாம் பாவில், கஜேந்திரன் என்ற யானையை முதலையினின்றும் காத்தருளியதையும், பத்தாம் பாசுரத்தில் 'தென்னன் தொண்டையர்கோன்' செய்ததிருப்பணியும் கூறப்பட்டிருக்கின்றன.

இந்த திவ்விய தேசத்தில் பார்த்தசாரதி, மன்னாதர், சக்கரவர்த்தித்திருமகன், கஜேந்திரவரதன், யோகநரசிம்மர் என்ற பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளியிருப்பது மிகவும் மகிமையைத் தருகிறது. இம்மூர்த்திகளின் பிரபாவத்தை ஆழ்வார்களின் பாசுரங்களில் அருளியிருப்பதை மேலே கண்டோம். வட




**பார்த்தசாரதி சுவாமி கோயில்**

மொழியிலுள்ள மகாத்மியத்திலும் விரிவாகக் காணலாம். ஸ்ரீவைணவர்களால் பாராட்டிப் பேசப்படுகிற **கோயில், திருமலை, பெருமாள் கோயில்** என்ற ஸ்ரீரங்கம், திருவேங்கடம், காஞ்சீபுரம் ஆகிய திவ்விய தேசங்களின் எம் பெருமான்களே இங்கு எழுந்தருளியுள்ளார்கள் என்பர். இவற்றுடன் அகோபிலம், அயோத்தி இந்தப் பதிகளின் பெருமாள்களும் இங்கு கோயில்கொண்டிருப்பதும் இன்னும் சிறந்ததென்பர். மேலும் **நின்றும், இருந்தும், கிடந்தும்** பெருமாள் சேவை சாதிக்கும் காட்சிகளையும் இங்கே ஒருங்கே அமைந் திருப்பதும், **யோகம், போகம், வீரம்** என்ற அம்சங்களில் இறைவன் திருக்கோலங்கொண்டிருப்பதும் இப்பதிக்கு மிக்க பெருமையைத் தருகின்றன. இன்னும் திருமழிசையாழ்வார் இங்கு பலகாலம் யோகத்தமர்ந்திருந்தனர் என்ற செய்தியும் கூறப்படுகிறது. பார்த்தசாரதி சுவாமி உற்சவ மூர்த்திக்குத் திருமஞ்சனம் ஆனவுடன் திருமுகம் கருமை கலந்த நீலநிறமாக மாறும் அற்புதம் நிகழ்கிறது.

சுமதி என்ற மன்னன் திருவேங்கடமுடையானைத் தனக்குக் கீதாசாரியனை பார்த்தசாரதியாகக் காட்சியருளவேண்ட இங்கு எழுந்தருளியதாகவும், இலட்சுமியானவள் பிருகுமுனிவர்க்குத் திருமகளாய் அவதரித்து வேதவல்லி என்னும் பெயருடன் வளர்ந்து மன்னுதனைத் திருமணம் புணர்ந்ததாகவும், அத்திரி முனிவர் தவத்திற்கு மகிழ்ந்து நரசிம்மர் காட்சியளித்ததாகவும், மதுமான்மகரிஷிக்கு சக்கரவர்த்தித்திருமகன் பிரத்தியட்சமானதாகவும், தம் குருவான வேதவியாசரின் ஆணையின்படி ஆத்திரேய முனிவர் பிருந்தாரண்யமான இந்த இடத்திற் வந்து தவமியற்றியதாகவும், சப்தரோமா என்ற மகரிஷி கருடாரூடரான வரதராஜரை இங்கு சேவித்ததாகவும், கைரவிணி புஷ்கரிணியின் பெருமை முதலியனவும் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

ஆழ்வார்களால் பாடப்பெற்றிருத்தலின் இது பழைய கோயில் என்பதில் ஐயமில்லை. இக்கோயிலில் தமிழ், தெலுங்குக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. மிகப் பழைய கல்வெட்டு பல்லவமன்னனான நந்திவர்மன் (கி.பி.779—830) காலத்தது. கோயில் பட்டர்கள் அடமானத்திற்கு வைத்த நிலத்தை புகழ்த்துணை விசையதரையன் என்பான் மீட்டு, பூசை நைமித்திகங்கட்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான் என்று இது தெரிவிக்கிறது. திருமங்கையாழ்வார், 'மன்னு தண்பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும் தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் 'திருவல்லிக்கேணி' என்று கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. விஜயநகர மன்னர் வீரவெங்கடபதிமகாராயர் (கி.பி. 1588—1616) காலத்திய கல்வெட்டுக்கள் மூன்றுள்ளன. ஒன்றில் திருமங்கையாழ்வார் சந்நிதிக்குக்கும்பாபிஷேகம் செய்ததைக் குறிக்கிறது. விஜயநகரமன்னர் சதாசிவ மகாராயர் (கி.பி. 1542—1570) காலத்திய கல்வெட்டொன்றில், அன்பர் ஒருவர் கி.பி. 1564-ல் பள்ளிகொண்ட பெருமாள், கிருஷ்ணன், நாச்சியார் கோயில்களையும், மடைப் பள்ளி, திருமதிள்கள் திருவாய்மொழி மண்டபங்களையும் கட்டி, திருவுருவங்கள் பல பிரதிஷ்டை செய்து, புதுப்பாக்கம், வேப்பேரி, வியாசர்பாடி இந்த மூன்று கிராமங்களையும் தானம் செய்ததாகக் கூறுகிறது. விஜயநகர மன்னர் அரங்கராய மகாராயர் (கி.பி. 1578—86) காலத்திய தெலுங்குக் கல்வெட்டொன்றில் வெங்கடபதி மகாராயரின் சேனைத் தலைவரான திருமலைநாயனிங்காரு என்பவர் இரண்டு கிராமங்களை மானியமாக வழங்கியதை அறிவிக்கிறது. திரிபுவன சக்கரவர்த்தி குலசேகரதேவன் என்ற மாறவர்ம பாண்டியன் காலத்ததான கல்வெட்டில் நிலவிற்பனையையும், பெருமாளின் திருநாமம் 'தெள்ளியசிங்கநாயனார், என்பதையும் குறிக்கின்றது. மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டில் 'கோட்டூர் நாட்டுத் திருவான்மியூர்' என்ற குறிப்பு காணப்படுகிறது. சோழ அரசன் இராஜராஜ தேவன் காலத்திய கல்வெட்டொன்றும், இன்னும் சில கல்வெட்டுப் பகுதிகளும் காணப்படுகின்றன. இன்னும் அழகிய சிங்கப்பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் கோயில் ஊழியர்கள் வேலை முறைகளுக்கு எத்திராஜ நாயக்கர் என்பார் செய்த ஏற்பாடுகளைக் குறிக்கும். கோயிலில் அற்புதச் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. தில்லைத் திருச்சித்திர கூடம், தஞ்சைப் பெரியகோயிலிலுள்ள முருகன் கோயில் இவைகளில் இருப்பதுபோன்ற **சரபர்** உருவம் திருவல்லிக்கேணி கோயிலிலும் இருக்கிறது.

# -: திருமூலர் :-

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்தபி ரான்மூல னுகின்ற அங்கணனே

—நம்பியாண்டார் நம்பிகள்.

திருத்தொண்டத் தொகைபாடியருளிய சுந்தரர், அறுபத்துமூன்று நாயன்மார்களுள் இருவரையே 'பிரான்' என்ற பெயரிட்டழைத்தனர். எம்பிரான் என்று சம்பந்தரையும், நம்பிரான் என்று திருமூலரையும் குறிக்கிறார். 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று போற்றுகிறார். இதையொட்டியே திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பிகள் தலைப்பில் கண்ட செய்யுளில் 'பிரான் மூலன்' என்று கூறுகிறார். சேக்கிழார் பெரியபுராணத்தில் திருமூலர் வரலாற்றை இருபத்தெட்டு இனிய பாடல்களில் சொல்லியுள்ளார். அதன் சுருக்கமே இங்கு கூறப்படுகிறது.

திருக்கயிலைமலையில் நந்தியருள்பெற்ற யோகி ஒருவர் இருந்தார். அவர் அட்டமாசித்தி அறிந்தவர். அகத்திய முனிவருடன் சில காலம் உறையும் எண்ணத்துடன் பொதிய மலை நோக்கிப் புறப்பட்டார். திருக்கேதாரம், பசுபதிநேபாளம், காசி, திருப்பருப்பதம், காளத்தி, ஆலங்காடு, ஏகம்பம் என்ற பதிகளில் இறைவனை வழிபட்டனர். காஞ்சியில் சில யோகியரைக் கண்டு அளவளாவிப் பின்னர் திருவதிகை சென்று தில்லையை அடைந்தனர். அங்கு திருநடனங்கண்டு சில நாள் தங்கிக் காவிரியைக் கடந்து திருவாவடுதுறை சேர்ந்தார். இறைவனைத் தொழுது செல்லும்போது வழியில் காவிரிக் கரையில் ஒரு பிணம் கிடப்பதையும் அதைச் சுற்றிப் பசுக்கூட்டங்கள் கதறியழுது கொண்டு நிற்பதையும் கண்டார். சாத்தனூரில் உள்ள அந்தணர்களின் பசுக்களை மேய்த்துவரும் மூலன் என்னும் இடையன் வாழ்நாள் முடிய அங்கு இறந்து வீழ்ந்தான். பசுக்களின் துயர் நீக்கக் கருதிய யோகியர் தம் உடலுக்குத் தகுந்த அரண் செய்துவிட்டு, கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தியால், தம் உயிரை இடையன் உடலில் பாய்த்தி மூலராய் எழுந்தார். பசுக்கள் வருத்தம் ஒழிந்தன. மாலைப்போதில் அவை தத்தம் இல்லங்களில் புகுந்தன. மூலன் மனைவி, இவர்காலந் தாழ்த்து நிற்பதைக் கண்டு அவரை அணுகி அழைத்தாள். தமக்கு அவளுடன் ஒரு தொடர்புமில்லையென்று சொல்லி ஒரு பொது மடத்திற்கு புகுந்தார். மறுநாள் பலர் வந்து அழைத்தும் இவர் இணங்கவில்லை. இவர் ஞான உணர்வு பெற்றார் என்று அறிந்து, மூலன் மனைவியை அழைத்துக்கொண்டு போய்விட்டனர். பிறகு திருமூலர் தமது பழைய உடலைத் தேடினர்; அது காணப்படவில்லை. ஆகமப் பொருளைத் தமிழில் வகுக்கவேண்டி இறைவன் உடலை மறைப்பித்தார் என்று உணர்ந்து திருவாவடுதுறையை அடைந்து ஒரு அரசமரத்தின்கீழ் சிவயோகத்தில் அமர்ந்தார். ஆண்டுக்கொரு பாடலாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளை விளக்கும் மூவாயிரம் பாடல்களை உலகுய்யப்பாடி மூவாயிரம் ஆண்டுகள் புவியில் வாழ்ந்திருந்து மீண்டும் திருக்கயிலை சென்று 'ஒருகாலும் பிரியாமைத் தாள் அடைந்தார்.'

சேக்கிழார் இவர் புராணத்தில் கயிலாயத்தில் 'நந்தியருள் பெற்ற நான்மறையோகிகளொருவர்' என்று பெயர் குறியாமல் சொன்னார். மூலன் உடலில் உயிர் பாய்த்தியெழலும் மூலர் என்று கூறினர். அதிலிருந்தே இவருக்குத் திருமூலர் என்ற பெயர் உண்டாயிற்று 'சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே' என்பதைக்கொண்டு இவருடைய இயற்பெயர்

சுந்தரநாதர் என்று சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

திருமூலருடைய காலத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் பலவாறு கூறுகின்றனர். ஒரு சிலர் கி.மு. 6000-க்கு முற்பட்டு இருந்திருக்க வேண்டுமென்கின்றனர்; மற்றுஞ்சிலர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் நாலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தவர் என்று கூறுகின்றனர்; வேறுசிலர் இவர் கி.பி. ஆறும் நூற்றாண்டினராய் இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். தேவாரம் பாடிய மூவர்க்கும் முன் இருந்தவர் என்பதில் ஐயப்பாடு ஒன்றுமில்லை.

திருமூலர் இயற்றிய நூலை, சேக்கிழார் திருமந்திரமாலை என்றும், தமிழ் மூவாயிரம் என்றும் கூறியிருக்கின்றனர். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப' என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இலக்கியமாக இந்நூல் அமைந்ததென்றும், அதனால் திருமந்திரம் என்ற பெயர் வந்ததென்றும் அறிஞர் கூறுகின்றனர். தமிழ் மூதாட்டியான ஔவை பிராட்டியார்,

> தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்.

என்று தமிழில் இணையற்ற சிறந்த நூல்களில் ஒன்றாகப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர்.

திருமந்திரத்திலுள்ள சில பாடல்களிலிருந்தும், பெரிய புராணத்திலிருந்தும் இந்நூல் மூவாயிரம் செய்யுட்களையுடையதென அறிகிறோம். இதுவரை வெளிவந்த பதிப்புக்களில் காப்புச் செய்யுள் உள்பட 3048 பாடல்கள் காணப்படுகின்றன. இதற்கும் மேலாக இன்னும் 11 பாடல்களும் சில பிரதிகளில் காணப்படுகின்றன. சேக்கிழார் கூற்றிலிருந்து 'ஒன்றவன்தானே' என்று தொடங்கும் செய்யுள்தான் திருமந்திரத்தின் முதல் பாசுரம் என்று தெரிகிறது. ஆதலின் 'ஐந்து கரத்தனை யானை முகத்தனை' என்று தொடங்கும் விநாயகர் வணக்கச் செய்யுள் பிற்சேர்க்கையாகும் என்கின்றனர் ஆராய்ச்சியறிஞர்கள். இன்னும், சில பாடல்கள் இரட்டித்து வருவதாலும், 'ஒட்டியாணம்,' 'கடுக்கன்', 'வட்டி' என்ற பிற்காலச்சொற்கள் விரவிவருவதாலும், 3000-க்கு மேற்பட்டுள்ள பாடல்கள் இடைச் செருகல்கள் என்றும் கூறுகின்றனர்.

'தந்திரம் ஒன்பது சார்வுமூவாயிரம்' என்று கூறியிருக்கிறபடி இந்நூல் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. பாயிரத்தில்—கடவுள் வாழ்த்து, வேதாகமச் சிறப்பு, திருமூலர் வரலாறு முதலியனவும், முதல் தந்திரத்தில்—செல்வம், இளமை, யாக்கை இவை நிலையாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை முதலியனவும், இரண்டாந் தந்திரத்தில்—அட்ட வீரட்டம், இறைவனின் ஐந்தொழில்கள் பற்றியும், மூன்றும் தந்திரத்தில்—அட்டாங்க யோகம், அட்டமாசித்தி முதலியவையும், நான்காம் தந்திரத்தில்—மந்திர வகைகள், சக்கரவகைகள் பற்றியும், ஐந்தாம் தந்திரத்தில்—சரியை, கிரியை, யோகம், ஞானம், சத்தி நிபாதம் முதலியனவும், ஆறும் தந்திரத்தில்—சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, திருநீறு, ஞானம், தவம், துறவு முதலியவையும், ஏழாம் தந்திரத்தில்—ஆறு ஆதாரங்கள், சிவபூசை, குருபூசை, அடியார்பெருமை முதலியனவும், எட்டாந் தந்திரத்தில்—உடல் அமைப்பு, அவத்தைகள், வாய்மை, பத்தி, முத்தி முதலியனவும், ஒன்பதாம் தந்திரத்தில்—இறைவன் திருநடனங்களின் உண்மை, ஐந்தெழுத்தின் சிறப்பு, சமாதி நிலையடைதல் முதலியனவும் திருமூலர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

சைவ சமய நூல்களை இருவகையாகப் பிரித்திருக்கின்றனர்; சாத்திரங்கள் (அறிவு நூல்கள்), தோத்திரங்கள் (அன்பு நூல்கள்) என்பவை. சாத்திர நூல்கள் பதினான்கு; தோத்திர நூல்கள் பன்னிரண்டு திருமுறைகள். திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாக அமைத்திருக்கின்றனர். சமயத்தைப் பற்றிய நூல்கள் திருமூலருக்கு முன்னாலே தனியே இல்லை. திருமந்திரமே சமய நூல்களுக்கெல்லாம் தலைசிறந்த முதல் நூலாக அமைந்திருக்கிறது. பதினான்கு சாத்திரங்களுக்கும் முற்பட்ட சித்தாந்த நூல். சித்தாந்தம் என்ற வடசொற்றொடரைத் தமிழில் முதலில் வழங்கியவர் திருமூலர்தான்,

திருமந்திரம் சாத்திர நூலோடமையாது, தோத்திர நூலாகவும் இருத்தலின் அதை பன்னிரு திருமுறைகளில் வைத்தனர். திரு மந்திரம் ஒரு ஆகம நூல் என்றும், ஒன்பது பழைய சிவாகம நூல்களை உளத்திற் கொண்டே ஒன்பது தந்திரங்களாக வகுத் தனர் என்றும் கூறுவர். திருமூல நாயனார்,

'நான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்'
'ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும்—நன்றேநினைமின்'
'ஆர்க்கும் இடுமின்
அவரிவரென்னன்மின்'
'வேதாந்த மாவது
வேட்கை ஒழிந்திடம்'
'வல்லபரிசால் உரைமின்கள்
வாய்மையை'
'வெல்லும் அளவில்
விடுமின் வெகுளியை'
'அகத்திற் கண்கொண்டு
பார்ப்பதே ஆனந்தம்'
'பெரியாருடன் கூடல்
பேரின்பமாமே'
'பற்றது பற்றிற்
பரமனைப் பற்றுமின்'
'உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்'
'இறக்கின்ற காலத்தும்
ஈசனை உள்கும்'
'அன்பே சிவம்'

என்று கூறியுள்ள அரிய உண்மைகள் எக் காலத்தும், எச்சமயத்தாரும் நினைவிற் கொண்டு ஒழுகத்தக்க பொதுவான அற வுரைகள்; பொன்னுற் பொறிக்கத்தகும் பெற்றியவை. நந்தியருள் பெற்றவர்கள் தம் மொடு எண்மர் என்றும், மந்திரம் பெற்றவழி முறையில் எழுவர் தமது வழி என்றும், தம்மையுள்ளிட்ட எழுவர் எழுமடங்களை நிலை நாட்டினர் என்றும், 'இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி' என்றும் கூறுகிறுர்.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக் கண்டவனுடலிற் பாய்ந்துபோத
வயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக்கொருபா வரகக்
குயிலாரு மரசடியிலிருந்து கூறிக்
கோதிலா வடகயிலைக் குறுகி னுரே

—உமாபதி சிவாசாரியார்.

சக்கரவர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநா ளெந்நாளோ

—தாயுமானவர்.

*

*விக்கிரமசிங்கபுரம் ஸ்ரீ சிவந்தியப்பர் திருக்கோயிலில் பொதுமறை மன்றச் சார்பில் நடத்தப்பெறும் பொதுமறை வகுப்புகளின் ஆண்டு நிறைவு விழா 15—3—59-ல் மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.*

*நெல்லை கணபதி மில்ஸ் அதிபர் சைவப் புரவலர் திரு S. S. அருணசலம் பிள்ளை விழாவைத் துவைக்கிவைத்து "அஞ்செழுத்"தின் பெருமையை விளக்கினுர். கோயில் டிரஸ்டி திரு மு. திருமலைப்பிள்ளை அறிக்கை வாசித்தார். வித்துவான் திரு சு. இலக்குமணப் பெருமாள் 'நாடும் ஏடும்' என்பது பற்றியும், ஆதீன சமயச் சொற்பொழிவாளர் திரு ஆ. முத்துகுமாரசாமி பிள்ளை "மூன்று குறள்கள்" என்பது பற்றியும், திரு அ. க. நவநீதகிருஷ்ணன் "திருக்குறளும்—திருத்தொண்டர் புராணமும்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினுர்கள்.*

# திருமழிசை ஆழ்வார்

தருச்சந்தப் பொழில்தழுவும் தாரணியின் துயர்தீரத்
திருச்சந்த விருத்தம்செய் திருமழிசைப் பரன்வரும் ஊர்
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணம்நாறும்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே

—திருக்கச்சி நம்பிகள்.

தொண்டை நாடு சான்றோருடைத் தென்பது ஆன்றோர் படைத்த அமுதமொழி. அவ் வளநாட்டின் கண் திருமழிசை என்ற பதி ஒன்று உண்டு. அவ்வூரின் கண் வதிந்த பார்க்கவர் என்பவரும் அவர் மனைவியாரும் மகப்பேறின்றித் தவம் கிடந்தனர். அவ்வம்மையார் கருவுற்றுக் கைகால்கள் முதலிய உறுப்புக்களில்லாத ஒரு பிண்டத்தைப் பெற்றனர். அது கண்டு மனம் தளர்ந்த பெற்றோர் அதனை ஒரு பிரம்புத்தூற்றின் கீழ் இட்டுப் போயினர். எம்பெருமான் திருமாமகளுடன் எழுந்தருளி அதனை அன்போடு அருள் நோக்கம் செய்தனர். பிண்டம் எல்லா உறுப்புக்களும் அமையப்பெற்று ஒரு அழகிய ஆண் மகவாய்த் திகழ்ந்தது. அழவும் தொடங்கிற்று. அப்போது பிரம்பு அறுக்கவந்த திருவாளன் என்பான் குழந்தை அழும் சத்தம் கேட்டு அந்த இடத்திற்கு வந்து அதையெடுத்துச் சென்று தனது மனைவியான பங்கயச் செல்வியிடம் கொடுத்தான். அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாததால் அக்குறை நீக்க இறைவன் தந்ததென மகிழ்ந்து இருந்தனர். அக்குழந்தை பல நாள் வரை பாலுண்ணுதிருந்தும் வாட்டம் ஏதுமின்றிப் பொலிவுற்று விளங்கியது. அச்செய்தி ஊர் முழுவதும் பரவியது. திருமாமகள் நாதன் பால் பேரன்புடைய பெரியார் ஒருவர் பாலைக் காய்ச்சிக் கொண்டு வந்து குழந்தைக்குக் கொடுக்க அதனை விரும்பி அது உண்டது. பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க அப்பெரியாரும் நாள் தோறும் பால் கொண்டு வந்து குழந்தையை உண்பிக்கச் செய்தார். ஒருநாள் அத்திருமகவு கொடுத்த பாலில் கொஞ்சம் குடியாமல் வைத்துவிட்டது. அப்படி எஞ்சியிருந்த பாலை மகப்பேறில்லாத அப்பெரியாரும் அவர் மனைவியும் அருந்தினர். பிறகு, அந்த அம்மையார் கருவுற்றுப் பத்துத்திங்கள் கழிந்த பின்னர் ஒரு ஆண் மகவைப்பெற்றனர். அக்குழந்தைக்குக் கணிகண்ணன் என்று பேரிட்டு வளர்த்து வருவாராயினர்.

பார்க்கவ புத்திரரும், திருவாளன் பங்கயச் செல்வி இவர்களின் அரும்பெறல் மகவாய் வளர்ந்து வந்தனர். அப்பிள்ளைக்கு யோகம் புரியும் கருத்து உண்டாயிற்று. பல சமய நூல்களைக்கற்று முதற்பொருளை அறிய வேண்டும் என்ற அவா மேலிட்டது. ஆதலின் சாக்கியம், சமணம் முதலிய சமய நூல்களை ஓதி உணர்ந்து, பின்னர் சைவ சமயத்தைச் சார்ந்து அச்சமய நூல்களை ஆராய்ந்து கொண்டு சைவராய் விளங்கினர். திருமழிசையார் பல தலங்களை வணங்கிவிட்டு, திருமயிலையையடைந்து முதலாழ்வார் மூவரின் ஒருவரான பேயாழ்வாரைக் கண்டனர். ஆழ்வார், திருமழிசையாரின் பக்குவ நிலையையறிந்து ஆட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டனர். திருமழிசையார், பேயாழ்வாரைத் தமக்குத் திருமகள்நாதன் திருவடிகளை யடைந்து பேரின்ப வாழ்வுதரும் பேற்றை யருளவேண்டுமென்று வேண்டினர். அவரும் முறைப்படி திருமந்திரத்தை உபதேசித்தனர். திருமழிசையார் யோகத்திலிருக்க, திருமாமகள் நாதன் கருடன்மேல் வந்து சேவை சாதித்தருளினன். பின்னர், திருமழிசைப்பிரான் திருவல்லிக்கேணியையடைந்து ஒரு பொய்கைக் கரையில் யோகத்தில் அமர்ந்தனர். அப்போது

திருமாலைத் தவிர பிற தெய்வத்தை நினையாத இவருடைய உறைத்த கொள்கைக்கு மெச்சி இவருக்கு **பக்திசாரர்** என்ற திருநாமத்தைச் சிவபெருமான் வழங்கியருளினர். சுத்திகாரன், கொங்கணச்சித்தன் என்பவர்களிடம் ஆழ்வார் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினர்.

பிறகு, ஒரு மலைக்குகைக்குச் சென்று யோகத்தில் அமர்ந்திருந்தனர். அங்ஙனமிருக்கையில் அவரைக் காண முதலாழ்வார் மூவரும் அங்கு வந்து திருமழிசையாருடன் யோகத்திலிருந்தனர். பின்னர், நால்வரும் பேயாழ்வார் அவதாரத்தலமான திருமயிலைக்குச்சென்று யோகம் செய்தனர். சின்னாட்பின், முதலாழ்வார் மூவரும், திருமழிசை யாழ்வாரிடம் விடைபெற்றுக்கொண்டு திருமயிலையை விட்டகன்றனர். திருமழிசைப் பிரானும் தமது பதியான திருமழிசைக்குச் சென்றனர்.

திருவேங்கடமுடையான் திருவருளால் திருமண் இருக்கும் இடம் அறிந்து, திருமழிசைப்பிரான் திருமண் எடுத்துப் பன்னிரண்டு திருநாமங்கள் அணிந்துகொண்டனர். பின்னர், பொய்கையாழ்வார் அவதரித்த திருக்கச்சியைச்சார்ந்த திருவெஃகாவென்னும் திருப்பதிக்குத் திருமழிசைப்பிரான் சென்று எம்பெருமானைச் சேவித்து யோகத்திலிருந்து வந்தனர். அங்ஙனமிருக்கையில் கணிகண்ணர் அங்கு அவருடைய சீடராகித் தொண்டு புரிந்து கொண்டிருந்தனர். திருமழிசைப்பிரானுடைய பெருமையை யறிந்த முதியவள் ஒருத்தியும் நாள்தோறும் வந்து அவர் இருக்குமிடத்தைத் திருவலகிட்டுத் தூய்மை செய்து வருவாளாயினள். அவள் தொண்டிற்கு மகிழ்ந்து திருமழிசையாழ்வார் அவள் இளமை யெய்தும்படி அருளினர். அவள் அழகில் ஈடுபட்ட அந்நகரிலிருந்து அரசாண்ட பல்லவ மன்னன் அவளை மனைவியாகக் கொண்டனன். தான் முதுமையடைவதை யறிந்து இளமையடையும் வழியைத் தனக்குத் தெரிவிக்கும்படி மனைவியை அரசன் கேட்டான். கணிகண்ணரின் துணைக்கொண்டு ஆழ்வாரின் அருளால் அது எய்துதல் கூடும் என்று அறிவித்தாள். அரசன் கணிகண்ணரை அவருடைய குரவரை அழைத்துவர வேண்டினன். அது முடியாதென்று அவர் சொல்ல, அரசன் கணிகண்ணரைத் தன்மீது ஒரு பாடல் பாடும்படி வேண்டினன். அவர் "வாய்கொண்டு மானிடரைப் பாடமாட்டேன்" என்றார். திருமாலின் அமிசமான அரசரைப்பாடுவது குற்றமாகாது என்று அரசன் சொன்னான். கணிகண்ணர்,

**ஆடவர்கள் எங்ஙன் அகல்வார் அருள்சுரந்து**
**பாடகமும் ஊரகமும் பாம்பணையும்—நீடியமால்**
**நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றே**
**மன்றார் பொழிற்கச்சி மாண்பு.**

என்று பாடினர். அரசன், "என்னைப் பாடச் சொல்ல இறைவனைப் பாடியது ஏன்" என்று கேட்டான். கணிகண்ணர், "திருமாலைப் பாடினால் அவர் அமிசமான அரசரைப் பாடுவதாகும்" என்று பதில் சொன்னார். சினங்கொண்ட பல்லவவேந்தன் கணிகண்ணரை நகர்விட்டுச் செல்ல ஆணையிட்டனன். அவரும் தம் குருவான திருமழிசையாழ்வாரிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி நகர்கடந்து செல்ல விடை தருமாறு வேண்டினர். பக்திசாரர், சீடரை நோக்கி "நீர் சென்றால் நமக்கு இங்கு என்ன வேலை"யென்று சொல்லித் திருவெஃகாவிற்குச் சென்று எம்பெருமான் திருமுன்,

**கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா-துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்**

என்று பாடினர். இறைவனும் அரவப் பாயைச் சுருட்டிக்கொண்டு ஆழ்வாரைப் பின் தொடர்ந்தனன். மூவரும் நகர்ப்புறத்தே இரவு ஓரிடத்தில் தங்கியிருந்தனர். நகர் முழுவதும் பொலிவிழந்தது. அரசன், திருமழிசைப் பிரான், கணிகண்ணர், திருவெஃகா இறைவன் இவர்கள் கச்சிப்பதியை விட்டு நீங்கியதே அதற்குக் காரணம் என்பதை அறிந்தான். அரசன் அமைச்சருடன் கணிகண்ணர் இருக்குமிடம் வந்து தன் பிழையைப் பொறுத்து நகருக்கு மீள வேண்டுமென்று விண்ணப்பித்தான். கணிகண்ணர் குருவை வேண்ட, திருமழிசைப்பிரான் எம்பெருமானை நோக்கி,

**கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய**
**செந்நாப்புலவனும்போக்கொழிந்தேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்படுத்துக் கொள்**

என்று பாடிவேண்டினர். இறைவனும், பக்திசாரர், கணிகண்ணர் இவர்களுடன் மீண்டு வந்து திருவெஃகாவில் அரவணையில் பள்ளிகொண்டனன். நகரமும் முன்புபோல் பொலிவுபெற்று விளங்கியது.

பின்னர், திருமழிசைப்பிரான் திருக்குடந்தையில் உறையத் திருவுளங்கொண்டு வெஃகாவிற் பெருமானை வணங்கி கணிகண்ணருடன் புறப்பட்டுச் சென்றனர். வழியில் பெரும்புலியூர் என்ற ஊரில் ஒரு திண்ணையில் இளைப்பாறினர். அங்கு வேதம் ஓதிக்கொண்டிருந்த அந்தணர், ஆழ்வார் நான்காம் குலத்தவர் ஆதலின் அவர் கேட்க வேதம் ஓதக்கூடாதென்று நிறுத்திவிட்டனர். வேதம் ஓதுவதற்கு இடையூறாகத்தான் இருக்கவேண்டாமென்றெண்ணி ஆழ்வார் திண்ணையை விட்டிறங்கினர். அந்தணர் மறை ஓதத்தொடங்கி, விட்ட சொற்றொடர் தெரியாது மயங்கினர். பக்திசாரர் அங்கு கிடந்த நெல்லை யெடுத்து நகத்தால் பிளந்து விட்டஇடத்தைக் குறிப்பால் உணர்த்தினர். அந்தணர் ஆழ்வாரின் பெருமையுணர்ந்து மன்னிக்கும்படி வேண்டினர். அவ்வூரில் தங்கியிருந்தபோது பெரும்புலியூர் அடிகள் செய்யும் வேள்வியில் முதற்பூசையை ஆழ்வாருக்குச் செய்தனர். அதைக் கண்ட வேள்விச் சடங்கர்கள் பக்திசாரரை இழித்துப் பேசினர். அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த எண்ணிய ஆழ்வார்,

அக்க ரங்க ளக்க ரங்கள்
என்று மாவ தென் கொலோ
இக்கு றும்பை நீக்கி என்னை
ஈச னுக்க வல்லையேல்
சக்க ரங்கொள் கைய னேச
டங்கர் வாய டங்கிட
உட்கி டந்த வண்ண மேபு
றம்பொ சிந்து காட்டிடே

என்று பாடியருளினர். அவ்வளவில் மலர்மகள் நிலமகளுடன் எம்பெருமான் அனைவரும் காண, பக்திசாரார் திருமேனியில் காட்டியருளினன். சடங்கர்கள் செருக்கு ஒழிந்து ஆழ்வார் தங்களைப் பொறுத்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தனர். எல்லோருக்கும் அறிவுரை பகர்ந்து ஆழ்வார் திருக்குடந்தைக்குச் சென்றனர். அங்கு எழுந்தருளியுள்ள ஆராவமுதனை வணங்கி, தாம் இயற்றிய திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி இவைகளை உலகுய்ய உதவி, அப்பதியில் யோகத்திலிருந்து உலகை வாழ்வித்தருளினர்.

துவாபரயுகம் 862901 (கி. மு. 4202) சித்தார்த்தி தை கிருஷ்ண பட்சம் பிரதமை ஞாயிற்றுக்கிழமை மக நட்சத்திரத்தில் திருமழிசை ஆழ்வார் அவதரித்ததாக மூவாயிரப்படி குருபரம்பரை கூறுகிறது. இவர் முதலாழ்வார் மூவருடன் ஒரு காலத்தவராக இருந்தவர் என்று வரலாறு வழங்குகிறது. இவர் காலத்தில் பல்லவ மன்னன் ஒருவன் ஆண்டதாகத் தெரிவதால் காஞ்சிபுரத்தைத் தலை நகராகக்கொண்டு ஆண்ட பல்லவர் ஆட்சிக்காலமான கி. பி. நான்காம் நூற்றுண்டு முதல் எட்டாம் நூற்றுண்டுக்குட்பட்ட காலத்தில் இவர் இருந்திருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இவருக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் விளங்கவில்லை. சைவ சமயத்தில் இருந்தபோது இவருக்குச் சிவவாக்கியர் என்று பெயர் வழங்கியதென்பர். இவர் மற்ற சமய நூல்களைக் கற்றுப்பின்னர் வைணவ சமயத்தை மேற்கொண்டதை,

"சாக்கியம்கற் றோம்சமணம்
கற்றோமச் சங்கரனுர்
ஆக்கிய ஆகமநூல்
ஆராய்ந்தோம்—பாக்கியத்தால்
செங்கட் கரியானைச்
சேர்ந்தியாந் தீதிலோம்
எங்கட் கரிய
தொன் றில்

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருக்குடந்தையைப் பற்றிய இவர் பாடல்களில் ஒன்று பின்வருவது:

"நடந்தகால்கள் நொந்தவோ நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய்குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்

**கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திரு பேசுவாழி கேசனே."**

பாடலுக்கு மகிழ்ந்து இறைவன் தமக்குரிய பிரான் என்பதை ஆழ்வாருக்குத் திருமழிசைப் **பிரான்** என்று ஆக்கி, தான் **ஆராவமுதாழ்வான்** என்ற திருநாமத்தை ஏற்றுக் கொண்டான் என்று அறிஞர் கூறுவர்.

இவ்வாழ்வார், நூற்றிருபது பாசுரங்களையுடைய **திருச்சந்தவிருத்தமும்**, தொண்ணூற்றாறு பாடல்களைக் கொண்ட **நான்முகன் திருவந்தாதியும்** பாடியருளியுள்ளார். அவை சொற்சுவை, பொருட்செறிவு, மிடுக்குடன் கூடி இன்பம் பயப்பவை. ஆழ்வார்,

**வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விடை
அடர்த்த
பத்தி உழவன் பழம் புனத்து—மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து**

என்ற திருவந்தாதிப் பாடலில் "வித்தும் இடல் வேண்டும் கொல்லோ, விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்ற திருக்குறட் செய்யுளை மிக நயமாகக் கையாண்டிருக்கிறார். பெரும்புலியூரில் மறையோதும் அந்தணர் முன் இவர் நெல்லைக்கீறிக் குறிப்பித்தது "கிருஷ்ணநாம் வ்ரீஹீணாம் நகநிர்ப்பிந்நம்" என்ற வாக்கியம் என்பர்.

திருமழிசையார் விண்ணப்பத்திற்கிணங்க வெஃகாவிற் பெருமான் அவரைப் பின் தொடர்ந்து சென்றமையால் அவ்விறைவனுக்குச் **சொன்னவண்ணஞ் செய்த பெருமாள்** என்ற பெயர் வழங்குகிறது. இச்செய்தியை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில், "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" என்று குமரகுருபரர் குறித்துள்ளனர். பத்திசாரர், கணிகண்ணர், திருவெஃகா இறைவன் இம்மூவரும் கச்சிநகர்ப்புறத்தே சென்று தங்கியிருந்த இடம், ஓரிரவிருக்கை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

**அன்புடன் அந்தாதி தொண்ணூற்றா
றாருரைத்தான் வாழியே
அழகாரும் திருமழிசை
அமர்ந்தபிரான் வாழியே
இன்பமிகு தையில்மகத்
திங்குதித்தான் வாழியே
எழிற்சந்த விருத்தம்நூற்
றிருபதீந்தான் வாழியே
முன்புகழ்சேர் மழிசைவந்த
முனிவர்கோன் வாழியே
முழுப்பொன்னிப் பெருக்கெதிர்செய்
முதிர்கவியோன் வாழியே
நன்புவியில் நவிலாண்டு
பலவுறைந்தான் வாழியே
நங்கள்பத்தி சாரனிரு
நற்பதங்கள் வாழியே.**

---

திருச்சிராப்பள்ளி இம்பீரியல் வைர வியாபாரம் திரு. இரெங்கையா செட்டியவர்கள் 11—3—59-ல் எட்டு வயதுள்ள யானை ஒன்றை, ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதசாமி கோயிலுக்கு அளித்தார்கள். ஆலய நிர்வாகிகள் அன்னாருக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

---

சென்னை, திரு மயிலை கபாலீச்சரத்தில் 14—3—59 முதல் 26—3—59 பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மூன்றும் திருநாள் அதிகாரநந்தி சேவை, ஐந்தாம் திருநாள் இடபவாகனக் காட்சி, எட்டாம் திருநாள் அறுபத்துமூவர் வீதி உலா இவைகளைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு பேரின்பமடைந்தனர்.

# திருத்தணி

அரகர சிவனரி அயனிவர் பரவிமுன்
அறுமுக சரவண பவனேயென்
றநுதின மொழிதர அசுரர்கள் கெடஅயில்
அனலென எழவிடும் அதிவீரா
பரிபுர கமலம தடியிணை அடியவ
ருளமதி லுறவருள் முருகேசா
பகவதி வரைமகள் உமைதர வருகுக
பரமன திருசெவி களிகூர
உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர உயர்வாய
உலகம னலகில உயிர்களு மிமையவ
ரவர்களு முறுவர முநிவோரும்
பரவிமு னநுதின மனமகிழ் வுறவணி
பணிதிகழ் தணிகையில் உறைவோனே
பகர்தரு குறமகள் தருவமை வனிதையும்
இருபுடை உறவரு பெருமாளே

—அருணகிரிநாதர்

முருகப் பெருமானுக்குச் சிறந்த திருப்பதிகள் ஆறு; ஆறுபடை வீடுகள் என்பர். அவை திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்பன. குன்றுதோருட்ல் என்பது குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வமாகிய முருகன் மலைமேல் கோயில் கொண்டுள்ள எல்லாத் தலங்களையும் குறிக்கும். 'மலையிற் சிறந்தது திருத்தணி மலையே' என்பர் ஆன்றோர். கந்தபுராணத்தில் 'வரையிடங்களிற் சிறந்ததித் தணிகைமால்வரையே' என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், குன்றுதோருடலில் முதல்தலமாகக் கொள்ளப்படுவது திருத்தணியே யாகும்.

இத்தலம் சித்தூர் மாவட்டத்தில் இருக்கிறது. தொண்டை நாட்டில் உள்ளதாகத் தமிழ் நூல்கள் கூறும். இதற்கு, தணிகாசலம், தணிகை, செருத்தணி, திருத்தணிகை, திருத்தணியல், நீலகிரி, நீலோற்பலகிரி, உற்பலசயிலம், குவளைச்சிகரி, கணிகவெற்பு, கல்லாரகிரி, காவிமலை, செங்கழுநீர்க்குன்றம், செங்கல்வகிரி, கந்தகிரி, இந்திரநகரி, நாரதப்பிரியம் எனப் பல பெயர்கள் வழங்குகின்றன. முருகக்கடவுள் சூரருடனும் வேடருடனும் போர் முடித்துச் சினந்தணிந்து அமர்ந்த இடமாதலால் **தணிகை** என்னும் பெயர் பெற்றது. சண்டைக்குப் பின் வந்து தங்கியதால் **செருத்தணி** என்று வழங்கலாயிற்று. இவ்வூர்க்கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களில் **திருத்தணியல்** என்ற பெயர் குறிக்கப்படுகிறது.

குமரக்கடவுள் மலைமீது கோயில்கொண்டுள்ளார். கோயில் மலை உச்சியில் கிழக்கு நோக்கி இருக்கிறது. வடக்கிலும் தெற்கிலும் பச்சரிசிமலை, பிண்ணாக்குமலை என்ற இரண்டு மலைகள் உள்ளன. மலைமீது செல்ல நன்றாகக் கட்டப்பட்ட படிக்கட்டுகள் இருக்கின்றன. மலையடிவாரத்தில் படிகள் தொடங்குமிடத்தில் திருக்குளம் அழகிய காட்சியளிக்கிறது. இதற்கு, **சரவணப்பொய்கை** என்றும், **குமாரதீர்த்தம்** என்றும் பெயர்கள் உண்டு.

அடிவாரத்திலிருந்து மலையுச்சியிலுள்ள கோயிலையடைய 365 படிகளில் ஏறிச் செல்ல வேண்டும். பாதிவழியில் பிரமசுனை, விநாயகர், பிரமலிங்கம் இவைகள் உள்ளன. உச்சியை யடைந்ததும் தேர்வீதி தென்படுகிறது. இவ்வீதியை வலம் வந்தால் தெற்கு வாயிலுக்கு நேரே இந்திர நீலசுனை இருக்கிறது. மேற்கு வெளிப்பிரகாரத்தில் செங்கழுநீர் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. வடகிழக்கு மூலையில் நவாப்பு வாத்திய மண்டபம் இருக்கிறது. இதில் மகம்மதியர்கள் இருந்து வாத்தியம் வாசிக்கின்றார்கள்.

தேர்வீதி சுற்றிக் கிழக்கு வாயிலாகச் சிலபடிகள் ஏறிச் சென்றதும் உள்ளே வெளிப் பிரகாரத்தை அடைகிறோம். இதை வலம் வரும்போது தென்மேற்கு மூலையில் உமாமகேசுவரர் கோயில் உள்ளது. இதற்கடுத்து வடபுறம சர்வவாத்திய மண்டபம் இருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் உச்சிப் பிள்ளையார் கோயில் இருக்கிறது. கிழக்குப்

பிரகாரத்தில் விநாயகரும் ஐராவதமும் காண லாம். ஐராவதம் கிழக்கு நோக்கி யிருப்பது கவனிக்கத்தக்கது. 'ஓடாப் பூட்கைப் பிணி முகம் வாழ்த்தி' என்று நக்கீரர் கூறியிருப் பது இங்கு குறிக்கும் தகையது. வாயிலின் தென்புறம் பிரசன்னகாதரீசுவரர் சந்நிதி இருக் கிறது. காதர் என்ற நவாப்பு ஒருவன் துன் பம் தீரப் பெற்றதால் இங்கு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, வாத்திய மண்டபத்தை யும் ஏற்படுத்தியதாக ஆன்றோர் சொல்கின் றனர்.

இரண்டாவது உட்பிரகாரத்திற்கு வந்து வலம் வரும்போது தெற்குப் பிரகாரத்தில் காமாட்சி ஏகாம்பரநாதர் சந்நிதியும், மேற்குப் பிரகாரத்தில் ஆறுமுகசுவாமி சந்நிதியும், வடக்குப் பிரகாரத்தில் குமரேசலிங்கர் சந்நிதி யும், வடகிழக்கு மூலையில் உருத்திராட்ச விமானத்தில் உற்சவமூர்த்தியும், கிழக்குப் பிரகாரத்தின் வடபால் ஆறுமுக நயினர் உற்சவமூர்த்தியும், ஆபத்சகாயவிநாயகர் சந் நிதியும், நவவீரர்கள், சூரியர் இவர்கள் சந் நிதிகளும் இருக்கின்றன.

மூன்ருவது உட்பிரகாரம் செல்ல 'பஞ்சாட்சரப்படிகள்' என்ற ஐந்துபடிகள் ஏறிப்போக வேண்டும். உள்ளே நுழைந்ததும் முருகப்பெருமான் திருக்கோலக் காட்சியைக் காணலாம். குமரக்கடவுளுக்குரிய பதினறு வகை உருவங்களில் ஞானசத்திதரர் என்னும் திருவுருவமே திருத்தணியில் இருப்பது. வலது திருக்கரத்தில் ஞானசக்தியாகிய வேலும், இடது திருக்கரம் தொடையிலும் அமைந்துள்ளன. விஷ்ணு ஆலயங்களில் சடகோபம் சாதிப்பதுபோல் இந்த சந்நிதி யிலும் முருகர்திருவடி வணங்குவோர் தலை யில் வைக்கப்படுகிறது. தீர்த்தம், திருநீறு, சந்தனம் இவைகளும் வழங்கப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள சந்தனக்கல் பல நூற் றுக்கணக்கான ஆண்டுகளாகப் பயன்பட்டும் தேய்வுபடாமல் ஜோதி வீசுகின்ற அணுக்க ளுடன் காணப்படுகின்றது. இதில் அரைக் கப்பட்ட சந்தனத்தை உட்கொண்டால் சகல நோய்களும் தீரும் என்பர். தணிகைப் பெரு மானை வணங்கிய பின்னர், வடக்கே தேவ யானை சந்நிதியும், தெற்கே வள்ளியம்மை சந் நிதியும் தரிசிக்க வேண்டும்.

மாதக்கிருத்திகை சிறந்த திருநாள். கார்த்திகைக் கிருத்திகையும், மாசிக் கிருத் திகையும் இன்னும் சிறந்தவை. எல்லாவற் றிற்கும் மேலாக ஆடிக் கிருத்திகையன்று பெரிய திருவிழா. பல்லாயிரக்கணக்கான மக் கள் வந்து வழிபடுவர். பூக்காவடிகள் எண் ணில எடுப்பர். அப்போது சரவணப் பொய்கையில் தெப்பத் திருநாளும் நடை பெறும். சித்திரையில் தெய்வயானையுடனும், மாசியில் வள்ளியம்மையுடனும் முருகப்பெரு மானுக்கு இரண்டு பிரம்மோற்சவங்கள் நடை பெறுகின்றன. மகாசிவராத்திரி யன்று 1008 சங்காபிஷேகம் நடைபெறும். 'திருப்புகழ் ஓதுங்கருத்தினர் சேரும் திருத்தணி மேவும் பெருமாளே' என்ற அருணகிரியார் வாக்கிற் கிணங்க, ஆங்கில ஆண்டுப் பிறப்பன்று தொண்டர் திருகப்புகழ் பாடி மலையேறி ஆண் டவனை வணங்கி வருகின்றனர்.

சிவபெருமான், திருமால், இராமர், பிர மன், இந்திரன், நந்திதேவர், ஆதிசேஷன், நாரதர், அகத்தியர், சப்தமுனிவர், அகோரன் முதலியவர் இங்கு வழிபட்டதாகப் புராணம் கூறுகிறது. விஷ்ணு தீர்த்தம், பிரமசுனை, இந்திர நீலசுனை, நந்தியாறு, ஆதிசேஷ தீர்த் தம், அகத்தியர் தீர்த்தம், ஏழுசுனை முதலிய தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன.

தணிகாசலத்தைப் பற்றி 'கல்லாரகிரி மகாத்மியம்' என்று கிரந்தத்தில் ஒரு நூல் உண்டு. கவிராட்சசரான கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் புராணம் மிகச் சிறந்த நூல். கந்தப்பதேசிகர் இயற்றிய தணிகாசல புராணமும் இத்தலத்தைப்பற்றியதே. அருண கிரிநாதர் இத்தலத்திற்குத்தனியே 64 திருப் புகழ்ப் பாடல்களையும், மற்ற தலங்களோடு சேர்த்து 19 பாடல்களையும் அருளியுள்ளார். கந்தரலங்காரத்தில் மூன்று பாடல்களும், கந்த ரந்தாதியில் ஆறுபாடல்களும், திருவகுப்பில் 12 வகுப்புக்களும் இப்பதியைப் பற்றி அவரே பாடியுள்ளார். கந்தரலங்காரத்தில்,

கோடாத வேதனுக்கு யான் செய்த<br>
குற்றமென் குன்றெறிந்த<br>
தாடாளனே தென் தணிகைக் குமர<br>
நின் தண்டையந் தாள்

**சூடாத சென்னியும் நாடாத கண்ணும்**
**தொழாத கையும்**
**பாடாத நாவும் எனக்கே தெரிந்து**
**படைத்தனனே**

என்று வரும் பாடல் மிக அழகுபடைத்தது.

கச்சியப்பசிவாசாரியார் கந்த புராணத்தில் வள்ளியம்மைத் திருமணப் படலத்தில் தணிகைமலைச் சிறப்பைக் கூறுகிறார். முருகன் சூரர்களுடன் போர் முடித்து திருப்பரங் குன்றத்தில் தெய்வயானையை மணந்து பின்னர் வள்ளியம்மையை மணம் புணர்ந்து தணிகை மலையில் எழுந்தருளினர். கச்சியப்ப முனிவர் **தணிகைப்பதிற்றுப்பத்தந்தாதி, தணிகையாற்றுப் படை** என்ற நூல்களையும், கந்தப்ப தேசிகர் **திருத்தணிகைச் சந்நிதிமுறை, தணிகாசல அநுபூதி** என்ற நூல்களையும் இயற்றியுள்ளனர். ஆசிரியர் பெயர் தெரியாத **தணிகையமக அந்தாதி** என்ற ஒரு நூலும் உண்டு. வடலூர் இராமலிங்க அடிகள் **திருத்தணிகைப் பதிகங்களைப்** பாடியுள்ளனர். சுப்பிரமணியத் தம்பிரான் என்பவர் **திருத்தணிகை விருத்தம்** என்ற நூலை யாத்திருக்கின்றனர்.

திருத்தணிகையம்பதியில் வீரட்டானேசுவரர், ஆறுமுகசுவாமி, விஜயராகவப் பெருமாள், ஏழு கன்னியர் இவர்களுடைய கோயில்கள் பார்க்க வேண்டியவை.

திருத்தணிகைமலைக்கோயில் பண்டைப் பெருமை வாய்ந்தது. திருநாவுக்கரசர் திருப்புறம்பயத் திருத்தாண்டகத்தில் 'கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றம்' என்று கூறியிருப்பதைத் திருத்தணிகையைக் குறிக்கும் என்று கொண்டால் இது 1300 ஆண்டுகட்கு முன்பே இருந்ததாகக் கருதலாம். இவ்வூரிலுள்ள வீரட்டானேசுவரர் கோயில், மலைக் கோயில், விஜயராகவப் பெருமாள் கோயில், ஆறுமுக சுவாமி கோயில் முதலியவைகளில் பல தமிழ், தெலுங்கு, வடமொழிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதலாம் பராந்தக சோழன் (கி. பி. 907-953) காலத்திய கல்வெட்டொன்றில் 'குன்றின்மேலுள்ள சுப்பிரமணியப்பிள்ளையார் கோயில்' என்ற குறிப்பு வருகிறது. அதனால் 1000 ஆண்டுகள் முன்னரே இக் கோயில் இருந்ததென்பதற்கையமில்லை. 500 ஆண்டுகளின் முன் வாழ்ந்த அருணகிரிநாதர் 83 திருப்புகழ்ப் பாடல்களிலும், கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு முதலியவைகளிலும் இத்தலத்தைப் பற்றி விதந்தோதியுள்ளார்.

மேலே சொல்லப்பட்ட கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மேல்மலைத்தணியல் நாடு என்றும், குன்றவர்த்தனக் கோட்டத்துத் திருத்தணியல் என்றும் கூறப்படுகிறது. இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன், கங்க பல்லவ அபராஜித விக்ரமவர்மன், இராஜாதிராஜன், விஜயநகர மன்னர் வீரகம்பண்ண உடையார், சதாசிவ மகாராயர் முதலியவர்கள் காலத்தவை அக் கல்வெட்டுக்கள். திருவேங்கடம் சென்றுவரும் யாத்திரிகர்கட்கு உணவளித்தல், கோயிற்றிருப்பணிகள், திருவிளக்குகளுக்கு மானியம் விடப்பட்டது, நில விற்பனை செய்யப்பட்டது, மற்றபடி கோயில்களுக்கு ஊர்கள், நிலங்கள், ஆடுகள் இனவகைகள் வழங்கப்பட்டதை இக்கல்வெட்டுக்களின் மூலம் அறிகிறோம்.

**ஐயனே நினை யன்றி யெங்கணும்**
**பொய்யனேற் கொரு புகலிலாமையால்**
**வெய்யனேனென வெறுத்து விட்டிடேல்**
**மெய்யனே திருத்தணிகை வேலனே**

—இராமலிங்க அடிகள்

***

ஒரத்தநாடு தாலுகா பரிதியப்பர் கோயிலில் ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ பாஸ்கரேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் 15—3—59 முதல் 26—3—59 வரை நடைபெற்றது.

# முருகன்

முருகன் குமரன் குகன்என்று மொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே

—அருணகிரிநாதர்

வாக்கு மனம் முதலியவற்றிற்கு எட்டாத பரம்பொருளை நினைப்பதற்கும், வாழ்த்துவதற்கும், வணங்குவதற்கும் நம்முடைய கோயில்களே துணைக் கருவிகளாக இருந்து வருகின்றன. அக் கோயில்கள் பலதிறத் தத்துவங்களையுடைய ஓவிய நிலையங்களாகும். அவைகளில் சிவலிங்கம், திருமால், தேவி, விநாயகன், முருகன், கண்ணன், நடராஜன், தட்சணாமூர்த்தி, அடியவர்கள் முதலியவர்கள் திருவுருவங்களை வைத்து வழிபடுகிறோம். 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ' என்ற மணிவாசகர் திருமொழி ஈண்டு நினைவு கூர்தற்பாலது. விநாயகன், கண்ணன், கூத்தப் பெருமான் இவர்களின் திருவுருவத் தத்துவங்களைப் பற்றிய கட்டுரைகள் முன் இதழ்களில் வெளிவந்துள்ளன. முருகனின் திரு உருவ உண்மைப் பொருளை விளக்க எழுந்ததே இக்கட்டுரை.

முருகு என்ற முதல் நிலை அன் என்ற ஆண்பால் இறுதி நிலையுடன் சேர்ந்து முருகன் என்றாயிற்று. முருகு என்பது பல பொருள் கொண்ட ஒரு சொல். சிறப்பாக, இளமை, அழகு, மணம், கடவுள்தன்மை, தேன் என்ற பொருள்களைக் கொள்ளலாம். ஆகலின் முருகன், மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாதநறுமணமும், நிறைந்த தெய்வத் தன்மையும், தெவிட்டாத இனிமையும் உடையவன் என்று கொள்ளலாம். "என்றும் இளையாய் அழகியாய்" என்ற பழம் பாடற்பகுதி இங்கு கவனிக்கத்தக்கது. ம்-ர்-க் என்ற மெல்லின, இடையின, வல்லினமெய் எழுத்துக்களுடன், உ என்ற உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு என்றாயிற்றெனறிஞர் கூறுகின்றனர். உகரம் சக்தி எழுத்து. சக்தியானது இச்சை, அறிவு, செயல் என்ற மூன்று பிரிவில் வெளிப்படும். வலிந்தும், மெலிந்தும், நடுநின்றும் செய்ய வேண்டுவனவற்றைச் செய்யவேண்டும் என்பதை மூவகை மெய்யெழுத்துக்களும் குறிக்கும்.

முருகன் முழுமுதற் கடவுளா என்பது ஆராயத்தக்கது. சிவபெருமான் மைந்தன் என்று உபசாரமாகச் சொல்வதுதான். ஐம்முகச் சிவனுக்கும், அறுமுகச் சிவனுக்கும் பேதமில்லை யென்பது ஆன்றோர் கருத்து. அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபிரானை அணுகி அவரே, அவரிடம், அவர்போல் ஒரு மகனை அருள வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றனர், கந்த புராணத்தில்,

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும்
உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும்
இன்பமும் துன்புமின்றி
வேதமும் கடந்துநின்ற விமலா
ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால்
நின்னையே நிகர்க்க

என்றது இதற்குப் போதிய ஆதாரம். 'ஈசனே அவனுடலால் மதலையாகினன்காண், பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்' என்றும், சிவபெருமான் கூற்றாக 'ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்' என்றும் கச்சியப்பசிவாசாரியர் மேலும் வலியுறுத்தி யிருக்கின்றார். அவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் என்பதை "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்ற கூற்றால் அறிகிறோம்.

முருகன் அறுமுகம் கொண்டதன் உண்மை சிந்தித்தற்குரியது. சிவபெருமானுடைய ஐந்து முகங்களுடன் அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகமாயின. சிவத்துக்குரிய, தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், ஈசானம் என்ற முகங்கள் ஐந்துடன், சிற்சத்தியாகிய சிவசத்தியின் அதோமுகம் என்னும் கீழ்நோக்கிய முகம் ஒன்றுமாக ஆறு திருமுகங்கள் கொண்டு முருகன் சிவசொரூபமாகவும், சத்திசொரூபமாகவும் விளங்குகின்றான். நான்கு திசைகளையும் மேல் கீழிடங்களையும் அறுமுகங்களின் அருள் நோக்கால் பரிபாலனம் செய்கிறான். ஒரு பெட்டிக்கு ஆறு பக்கங்கள் உண்டு. ஒரு பக்கம் இல்லையேல் அது பயன்படாது போகுமல்லவா? முருகன் சமஷ்டித் தெய்வம். சருவஞ்ஞதை (முற்றறிவு), திருப்தி (வரம்பில் இன்பம் உடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்), அநந்தசத்தி (முடிவில் ஆற்றல் உடைமை), அலுப்தசத்தி (பேரருள் உடைமை), சுவதந்திரத்துவம் (தம் வயமுடைமை) என்ற அறுவகை இறைமைக் குணங்களும் அமையப் பெற்றவன். இதைக் கந்த புராணத்தில்,

**ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற் குள்ள**
**மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்ததென்னப்**
**பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்**
**ஆவிகள் அருளு மாற்றல் அறுமுகம் கொண்டான் அன்றே**

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆறுமுகங்கள் என்பன, திரு, புகழ், ஞானம், வைராக்கியம், வீரியம், ஐசுவரியம் என்பதை, 'வாதினையடர்ந்த' என்று தொடங்கும் திருப்புகழில், 'ஆதியொடந்தம் ஆகிய நலன்கள் ஆறுமுகம் என்று தெரியேனே' என்று அருணகிரிநாதர் விளக்கியுள்ளார்.

இந்த ஆறுமுகங்களின் செயல்கள் யாவை என்பவைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருமுகம் உலக இருளைப் போக்கி ஒளியைத் தருகின்றது; ஒருமுகம் அன்பர்க்கு வேண்டும் வரங்களை வழங்குகின்றது; ஒரு முகம் அந்தணர் வேள்வியைப் பாதுகாக்கின்றது; ஒருமுகம் முனிவர்க்கு நூற்பொருளை விளக்குகின்றது; ஒரு முகம் அசுரரை அழித்துக் களவேள்வி புரிகின்றது; ஒரு முகம் வள்ளியம்மையுடன் நகையமர்கின்றது. நக்கீரனார் இயற்றிய திருமுருகாற்றுப்படையின் திருச்சீரலைவாய்ப் பகுதியில் இதன் விரிவைக் காணலாம். ஆறுமுகம் ஆறுசமயம் என்றும் சிலர் கூறுவர். முருகன் எல்லாச் சமயங்களுக்கும் குருவென்பதை கந்தரநுபூதியில் 'முருகன், குமரன் முனி நம் குருவென்று அருள் கொண்டறியார் அறியுந்தரமோ' என்று விதந்தோதியிருக்கிறார். 'ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றும் கூறு சமயக் குருபரன் நான் என்றும்' என்ற திருமந்திரப் பாசுரம் இங்கு நினைவுகூர்தற்குரியது. பிற்காலப்பாடலான 'ஏறுமயில் ஏறி' என்பதில் அறுமுகங்களின் தொழில்களைச் சிறிது வேறு பாட்டுடன் காண்கிறோம். மயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று; ஈசனுடன் ஞானமொழி பேசும்முகம் ஒன்று; அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்று; குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று; மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்று; வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்று என்று அது கூறுகிறது.

அறுமுகப் பெருமானுக்குப் பன்னிரண்டு கரங்கள் இருப்பது இயல்புதானே. அவை பன்னிரண்டு மாதங்கள் அல்லது பன்னிரண்டு இராசிகள் என்று அறிஞர் கூறுவர். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பன்னிரு திருக்கரங்களின் தொழில்களை விளக்கியுள்ளார். ஒருகை தேவர்களையும் முனிவர்களையும் பாதுகாக்க அமைந்தது; ஒரு கை இடுப்பிலே வைத்தது; ஒரு கை ஆடையணிந்த தொடையிலே கிடப்பது; ஒரு கை அங்குசத்தைப் பிடித்துச் செலுத்துவது; இரு கைகள் கேடகத்தையும் வேலாயுதத்தையும் சுழற்றுவன; ஒரு கை மார்பிலே தங்கி விளங்குவது; ஒரு கை மாலையுடன் அழகுபெறத் தோன்றுவது; ஒரு கை உயர்த்தப்பட்டதால் நழுவித் தாழ்கின்ற தொடியோடு மேலே சுழன்று கொண்டிருப்பது; ஒரு கை இனிய மணி ஓசை புரிவது; ஒரு கை மேகத்தினின்றும் மழை பொழியச் செய்வது; ஒரு கை தெய்வ மகளிர்க்கு மணமாலை சூட்டுவது. ஆறுமுகங்களுக்கும் மேலே சொன்ன செயல்களை ஒட்டி பன்னிரண்டு கைகளுக்கும் முறையே தொழில்

களாக அமைத்து நக்கீரர் பாடியிருப்பது நுணுகியாராய்வார்க்குப் புலப்படும்.

முருகன் பக்கத்தில் வள்ளியும் தெய்வயானையும் திருக்கரத்தில் வேலும் திகழ்கின்றன. வள்ளி-இச்சாசத்தியையும், தெய்வயானை-கிரியாசத்தியையும், வேல்-ஞானசத்தியையும் உணர்த்துகின்றன. செயல் திறத்தால் அசுரர்களைக் கொன்றதால் தேவர்கள் தெய்வயானையை அழைத்து வந்து முருகனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். ஆனால் வள்ளியைத் தேடிச் சென்று வதுவை வேட்டான். மாயையாகிய தினைப்புனத்தில், ஐம்புலன்களாகிய வேடர் நடுவிலுள்ள, ஜீவான்மாவான வள்ளியை, ஓங்கார ரூபமான ஆனைமுகனைக் காட்டி, பரமான்மாவான முருகன், ஐக்கியம் செய்து கொண்டனன் என்பர். சண்முகலகரியில் 'விரியும் ஐம்புலப் பொய்வேடர் அவசமுற்ற வித்தையால், திரிதலுற்ற சீவாத்ம சிறுக்கி வள்ளியைச் சிறை பரிந்தெடுத்து ஐக்கிய பாவமாய்ப் புணர்ந்தனன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அறிவு ஆற்றலைக் குறிப்பதே ஞானசத்தி வேலாயுதம்; மக்களின் அக இருளைப் போக்கி ஒளி அருளச்செய்வது.

குமரக் கடவுளுக்கு வாகனமாகவும் கொடியாகவும் விளங்குபவை மயிலும் சேவலும். இவை இறைவன் உயிர்கள் மாட்டு காட்டும் ஒப்பற்ற கருணையைக் குறிக்கின்றது. பகைவனுக்கும் அருள் செய்யும் பண்பு முருகனிடமே முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது. சூரபதுமன் மயிலாகவும் சேவலாகவும் போருக்கு வந்தபோது, மயில்மேல் ஏறிக்கொண்டு கோழியைக் கொடியாகப் பிடித்துக்கொண்டான். 'மயில்மேல் சுப்பிரமணியம் இருப்பதுபோல் இருப்பது' என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது பட்டதும் படாததுமாகவும் மிகவும் எச்சரிக்கையாகவும் இருப்பது என்பது அதன்பொருள். முருகன் மயில்மேல் அழுத்தியமர்ந்தால் அது அழிந்துவிடும்; அதை விட்டுவிட்டால் மறுபடியும் சூரனாகி உலகிற்குத் துன்பம் விளைவிக்கும். 'நாதவிந்து கலாதி நமோநம' என்பது திருப்புகழ். நாதம்-கோழி, விந்து-மயில், 'விந்துவெனும் தடமா மயிலூர்' என்று திருப்போரூர்ச் சந்நிதி முறை கூறுகிறது. மயிலை ஓங்கார சொரூபமென்று திருப்புகழ் உரைக்கிறது.

ஊர், பேர், குணம், குறி இவைகள் இல்லாத பரம்பொருளுக்கு அவைகளையிட்டு வழங்குவது நம் பொருட்டேதான்.

**சுப்ரமண்யம்** என்பது முருகனுக்குரிய பல பெயர்களில் ஒன்று. ஸு—ஆனந்தம், ப்ரஹ்ம—பரவஸ்து, ந்ய—(ண்யம்) அதனின்றும் உதித்துப் பிரகாசிப்பது. முருகன் இன்பமும் ஒளியும் வடிவாக உடையவன் என்பது. வேதங்களும் அப்பெயரை முறையிடுகின்றன. 'முக்கனல் சூழ்வேள்வியிற் சுப்பிரமணியன் ஓம் எனவும் முக்காற் கூறும்' என்பது காஞ்சிப் புராணம். சுக்குக்கு மிஞ்சின மருந்தில்லை, சுப்பிரமணியனுக்கு மிஞ்சின தெய்வமில்லை என்பது பழமொழி.

**சரவணபவன்** என்பது நாணல் சூழ்ந்த பொய்கையில் தோன்றியவன் என்ற பொருள்படும். சரம்—நாணல், வநம்—நீர். இன்னும், ஸ=மங்களம், ர—ஒளி, வ—கொடை, ந—சாத்துவிகம், ந—போர், பவன்—உதித்தவன் என்ற பொருளில் மங்களம், ஒளி, கொடை, சாத்துவிகம், வீரம் என்ற சிறப்பியல்களுடன் தோன்றியவன் என்றும் ஆன்றோர் கூறுவர்.

**கந்தன் :** ஸ்கந்தம் (தோள்) என்ற சொல்லால் வலிமையுடையவன் என்ற பொருள் உடையது. கச்சியப்பசிவாசாரியார்,

'சேயவன் வடிவம் ஆறும்
திரட்டிநீ ஒன்றுய்ச் செய்தாய்
ஆயதனுலே கந்தனும்
எனும் நாமம் பெற்றுன்'

என்றும்,

'அந்தம் இல்லதோர்
மூவிருவடிவு மொன்ருகிக்
கந்தன் என்று பேர்
பெற்றனன் கவுரிதன் குமரன்'

என்றும் பெயர்க் காரணத்தை விளக்கியிருக்கின்ருர். கந்து என்ருல் நடுவில் இருப்பது. இறைவனுக்கும் தேவிக்கும் நடுவில் சோமாஸ்கந்தராக இருப்பது. 'இரவொடு பகலுக்கும் நடுவாய் மாலைபோல தொன்றிழிவின்றிவைகுமாருருக்கும், பாலனாகிய குமரவேள் நடுவுறும பான்மை' என்பதன் நயம் தெரிந்தின்புறற்பாலது.

**கார்த்திகேயன் :** கார்த்திகைப் பெண்கள் அறுவர் வளர்த்ததால் ஏற்பட்ட பெயர். ஐம்புல அறிவுகளும், மனமாகிய அறிவும் சேர்ந்து ஆறறிவுகளால் அவனைக் காண வேண்டும் என்ற தத்துவத்தைக் குறிக்கும் போலும். இதன் காரணமாக கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதமிருக்கிறோம்.

**காங்கேயன் :** கங்கையில் வளர்ந்ததால் உண்டான திருநாமம்.

**குமாரன் :** கு—குற்சிதம், அருவருப்பு, மாரன்—நாசம் செய்பவன் என்று பொருள் படும்.

**குகன் :** மனமாகிய குகையில் இருப்பவன்; தகராசத்தில் வதிபவன்; அடியார் மனக்கோயிலில் தங்குபவன்.

**விசாகன் :** வி—பட்சி, சாகன்—சஞ்சரிக்கின்றவன். மயிலை ஊர்தியாகக் கொண்டவன். விசாக நட்சத்திரத்தில் தோன்றியவன் என்பதும் ஆம். வைகாசி விசாகத்தில் திருவிழாக் கொண்டாடுவதும் இதனாலேயே.

**செவ்வேள் :** செம்மை நிறத்தினன்; சிவந்த ஆடையன். கருவேள் என்பது மன்மதனுக்குரிய பெயர் என்பது குறிக்கத்தக்கது. ஞானபண்டிதன், சுவாமிநாதன், தேவசேனாபதி என்பன போன்ற பலதிருநாமங்களும் முருகனுக்குண்டு.

முருகனே கலியுக வரதன்; கண்கண்ட தெய்வம். தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டே தமிழ்நாட்டில் முருகவழிபாடு இருந்து வந்திருக்கிறது. 'சேயோன்மேய மைவரை உலகம்' என்று குறிஞ்சி (மலை) நிலக் கடவுளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓங்காரத்துள்ளே ஒளியாகவும், ஆன்மாவிற்குள்ளே அறிவாகவும் உள்ள அழகனே முருகன். கண்ணனையும், முருகனையும் குழந்தைகளாவே நம் நாட்டில் வணங்கி வருகிறோம். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பது பழமொழி. 'அச்சிறு முருகனை' என்பர் அருணகிரிநாதர். 'குழந்தை முருகேசனுடை', 'குழந்தைவேல்' என்பனவும் இதை வலியுறுத்தும். குழந்தை கேட்டதெல்லாம் கொடுக்கும். சிவபெருமானுக்கும் பிரணவ உபதேசம் செய்து தகப்பன் சுவாமி ஆயினன். 'கோலமாமஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப் பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை யுணர்ந்திலேன் யான்' என்று சூரபதுமன் வருந்திக் கூறுகிறான். சங்கப் புலவர் ஒருவர் 'பொன்னும் பொருளும் போகமும் நின்பால் வேண்டவில்லை; அன்பும், அறமும், அருளும் வேண்டும்' என்று முருகனிடம் விண்ணப்பித்திருப்பது போற்றத் தக்கது.

முருகனை வழிபடுதற்குரிய கிழமை வெள்ளி; நட்சத்திரம் கிருத்திகை; திதி சஷ்டி. 'குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே' என்றும், 'சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்றும் கூறப்படுவதெல்லாம் கந்தசஷ்டி விரதத்தைக் குறிப்பவையே. இத்தகைய மகிமை வாய்ந்த முருகனை 'முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான்'; இகபர சவுக்கியம் அருள்வன்'; 'சகல செல்வயோக மிக்க பெரு வாழ்வு' கொடுப்பன்; 'முருகா என ஓர்தரம் ஓதுஅடியார் முடிமேல் இணைதாள்' வைப்பன்.

**முருகா எனஉனை ஓதும்தவத்தினர் மூதுலகில்**
**அருகாதசெல்வம் அடைவார் வியாதி**
**அடைந்துநையார்**
**ஒருகால முந்துன்பம் எய்தார் பரகதி யுற்றிடுவார்**
**பொருகாலன் நாடுபுகார்சம ராபுரிப் புண்ணியனே**

—சிதம்பரசுவாமிகள்

***

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி ஸ்ரீ இராஜகோபாலசுவாமி தேவஸ்தானத்தில் பிரம்மோற்சவம் 28—3—59 முதல் 20—4—59 வரை வெகு சிறப்பாக நடைபெறும்.

---

ஒரத்தநாடு தாலுக்கா பரிதியப்பர் கோயிலில் ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ பாஸ்கரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திர பிரம்மோற்சவம் 15—3—59 முதல் 26—3—59 வரை நடைபெற்றது.

# ✳ ஸ்ரீ ராதா கிருஷ்ணன் ✳

(பி. ஸ்ரீ.)

ஒரு சமயம் யசோதை தன் கண்ணனைப் பற்றிய செய்தியொன்றும் அறியாதிருந்த நிலையில் அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டாள். ராதையிருக்குமிடம் வந்து சேர்ந்தாள். ராதையிருக்கும் இடத்தில் கண்ணன் இருக்கக்கூடுமென்றும் எண்ணம். ஆனால் அங்கே கண்ணனைக் காணவில்லை.

'ராதே! கண்ணனுடைய செய்தி ஏதாவது உனக்குத் தெரியுமா?' என்று கேட்டாள் யசோதைப் பிராட்டி ராதைப்பெண்ணை நோக்கி. இந்தக் கேள்வியை ராதை காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. அவள் என்ன செய்வாள்?—அது காதில் விழுந்தால் தானே! அவ்வளவு பக்திபரவசமாயிருந்தாள் ராதை அந்தத் தருணத்திலே.

நினைவு வந்ததும் தனக்கு முன் யசோதை உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். பனிச் சென்று எழுந்து அடிபணிந்து வந்த காரியம் குறித்து வெகு விநயமாக விசாரித்தாள். 'ஏற்கெனவே சொல்லிவிட்டேனே; கண்ணனைத் தேடி வந்தேனம்மா' என்றாள் யசோதை.

ராதை இளநகையரும்பிய வதனத்துடன், 'கண்ணன் இந்த நிமிஷம் வரையில் என் எதிரேதான் நின்றுகொண்டிருந்தான்; இப்பொழுதுதான் போய்விட்டான்!' என்றாள் ராதை. யசோதைக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'நான் பார்க்கவில்லையே' என்றாள். அதற்கு ராதை 'தாயே! நீ கண்களை மூடிக்கொண்டு கண்ணனை நினைத்தால் காண்பீர்!' என்றாள்.

'இது என்ன விகடம் பண்ணுகிறாள்!' என்று முதலில் எண்ணிய போதிலும் யசோதை தன் கண்களை இறுக மூடிக்கொண்டு கண்ணன் உருவத்தைத் தியானித்தாள். இந்தத் தியான சக்தியுடன் கண்ணன் காதலின் சொரூபமாகிய ராதை தன்னுடைய அன்பின் ஆற்றலை யசோதையிடம் செலுத்தவே, யசோதையும் கண்ணனைக் கண்டுகொண்டாள்.

அப்பால் யசோதை ராதையை நோக்கி, 'அம்மா, என் செல்வப் பெண்மணியே! நான் கண்ணை மூடும்போதெல்லாம் என் கண்ணனை நான் காணும்படி எனக்கு நீ ஒரு வரம் தர வேணும் என்று மன்றாடினாள்.

இந்த அழகான, பொருள் பொதிந்த கதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸதேவர் திருவாய் மலர்ந்த உபதேச உதாரணக் கதைகளில் ஒன்று.

இந்த ராதை யார்? யசோதையின் கண்ணான கண்ணனைத் தன் கண்மணியாகப் பெற்றிருந்த ராதையைக் குறித்து நமது மறுமலர்ச்சிக்கவி பாரதியார் 'ராதைப்பாட்டு' என்ற தலைப்பில் மூன்று அழகான கண்ணிகள் பாடியிருக்கிறார்.

காதலெனுந் தீவினிலே,
  ராதே, ராதே!—அன்று
கண்டெடுத்த பெண்மணியே
  ராதே, ராதே!
காதலெனுஞ் சோலையிலே
  ராதே, ராதே!—நின்ற
கற்பகமாம் பூந்தருவே
  ராதே, ராதே!
மாதரசே! செல்வப்பெண்ணே,
  ராதே, ராதே!—உயர்
வானவர்கள் இன்பவாழ்வே,
  ராதே, ராதே!

ராதை என்ற பெயர் பக்தியெனும் தீவினிலே, பிரேமையெனும் சோலையிலே ஒரு கற்பகமாய் உலவுகிறது கிருஷ்ண பக்தர்களுக்கு.

வடநாட்டுப் பக்த கவிஞருள் ஒருவரான நரோத்தமர் பின்வருமாறு பாடுகிறார்:—'ஓ! இன்றிரவு பிருந்தாவனத்திலே தூய அன்பு மழை பொழிகிறது. கண்ணன் என்னும் கரு மேகம் தாரைதாரையாகக் கொட்டுகிறது. அந்த மேகத்தின் மார்பிலே என்றுமுள்ள மின்னலாக மின்னிக்கொண்டிருக்கிறாள் ராதை...அன்பின் இன்பப் பெருவெள்ளம் அதோ பரந்து கிடக்கிறது. நரோத்தமன் மூங்கி முழுகிப் போகிறான்; அவனுக்கு நீந்தத் தெரியாது.'

கண்ணன் என்னும் கருமேகம் தன் மார்பிலே மின்னலாக அணிந்துகொண்டிருக்கிறதாம் ராதை என்ற காதலியை. இது,

பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் [தோன்றி
மலிந்த திருஇருந்த மார்வன்

என்று முதலாழ்வார்களில் ஒருவர் போற்றும் லட்சுமி நாராயணமூர்த்தியை நினைவூட்டுகிறதல்லவா? 'உண்மையின் இதயத்திலே உள்ள அழகே அழகு; அதுவே அருள்' என்ற உட்பொருளை உணர்த்துகிறது லட்சுமி நாராயண வடிவம் என்றால், ஜீவாத்மா—பரமாத்மாவின் காதல் என்ற தத்துவத்தை ராதாகிருஷ்ண வடிவம் நினைவூட்டுகிறது எனலாம்.

ஸர்வ சக்தியுள்ள ஆண்டவனின் ஆனந்த அம்சம் ஸ்ரீ ராதை. ராதையும் கிருஷ்ணனும் நித்தியப் பெண்மையையும் நித்திய ஆண்மையையும் குறிப்பிடுகிறார்கள். புருஷோத்தமனை கண்ணன் ராதையென்ற ஆனந்த நிலையைத் தனியுருவமாக்கி அதன் மூலமாகத் தன் அழகையும் இனிய அன்பையும் அனுபவிக்கிறான் என்பர்.

அழியா அழகு என்பதே கண்ணன் வடிவு. இதன் ஒரு துளி உலகத்தையே வெள்ளக்காடாக்கி விடும். பெண்களோடு ஆண்களையும் சரிநிகர் சமானமாக உருக்க வல்லது இந்த அழகு. கவர்ச்சிகளுக்கெல்லாம் மையநிலை கண்ணன். எனினும் ராதையென்ற ஆனந்த அம்சத்தின் காதல் கண்ணனையும் கவரவல்லது என்பர். ராதையின் மேனி, உடை, அணி, குணம் எல்லாம் காதல் மயம்.

பிருந்தாவனத்திலே கண்ணன் ராதையுடன் அன்புத் திருவிளையாடல்கள் விளையாடிக்கொண்டிருக்கிறான் என்பதும், அந்த ராதையின் தோழிமார் கோபிமார் என்பதும் கதை. இறைவனது ஆனந்தநிலைக்குத் துணை புரியும் எல்லையற்ற சக்திகளே கோபியர் என்பர். கடவுள் சிறுவனை கண்ணனாக இருந்து ராதையுடனும் கோபியர்களுடன் தோழமை பூண்டு பரமாத்மா காதலிப்பதையும் காதலிக்கப்படுவதையும் வெளியிட்டாரென்பது கதையின் அடிப்படைப் பொருள்.

பத்மபுராணத்தில் பகவானே 'ஸ்ரீராதா என் காதலி; இந்தத் தேவிக்கு லட்சக்கணக்கான தோழியர் உண்டு. என் உருவம் எப்படி நித்தியமானதோ அப்படியே என்றும் உள்ளவர்கள் ராதையும் தோழியரும்' என்று கூறுவதாக வருகிறது. அதே புராணம் 'ஆனந்தத்தின் ஸாரம் என்னுடைய பிருந்தாவனம்' என்றும் பகவானே தெரிவிப்பதாகச் சொல்லுகிறது. 'ஆனந்தம் ஆடரங்கு' அதாவது, ஆனந்தம் நடராஜாவின் நடனமேடை—என்று திருமூலர் கூறுவதை இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம்.

ஆனந்த பிருந்தாவனத்தில் நடைபெற்ற அன்புத் திருவிளையாடல்களில் 'ராஸக்ரீடை'யைக் கிருஷ்ண பக்தர்கள் சிறப்பாய்க் குறிப்பிடுவார்கள். 'ராஸம்' என்ற சொல்லுக்கு விசுவநிகண்டில் 'கூட்டமாய் விளையாடும் ஆயர்களின் உல்லாசப் பொழுதுபோக்கு' என்னும் பொருள் காணப்படுகிறது. இத்தகைய திருவிளையாடல்கள் வாயிலாக வேதாந்த ஞானிகளின்பரப்பிரமமே 'அழியா அழகு' என்ற தன் வடிவை இவ்வுலகத்திற்குக் காட்டியது என்பர்.

'நண்பா! கேள் ஒரு விநோதக் கதையை. வேதாந்தத்தின் உச்சியிலுள்ள மெய்ப்பொருள் இன்று நந்தக்கோன் வீட்டு முற்றத்தில் தன் ஞானப் பொன்மேனி, புழுதிபடியக் கூத்தாடிக் கொண்டிருக்கக் கண்டேன்'—என்று வடநாட்டுப் பக்தகவியொருவர் பாடியிருக்கிறார்.

'அத்வைதசித்தி' ஆசிரியரான மதுசூதனி சரஸ்வதி சொல்லுகிறார்: 'அத்வைத நெறியைப் பின்பற்றுவோரால் ஜீவன்முக்தி என்ற தன்னரசுச் சிங்காதனம் ஏறத் தக்கவன்

என்று மதிக்கப் பெற்றிருந்தேன். அத்தகைய விருதுகளையும் அந்தத் துஷ்டச் சிறுவனின் காலடிகளில் வைத்து விட்டேன். அந்தச் சிறுவனே ஆயச்சிறுமிகளின் அடிச்சுவடுகளை என்றும் தொடர்பவன்' என்கிறார். ராதை உள்ளிட்ட கோபியரைத்தான் ஆயச் சிறுமியர் என்று சுட்டிக் காட்டுகிறார்.

முகலாயர் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஸ்ரீ ஜகந்நாதகவி கோபியரைக் கவர்ந்த சிறுவன் எப்படி உள்ளங்களை மோகவெறி கொள்ளச் செய்கிறான் என்பது குறித்துப் பின்வருமாறு பாடுகிறார். 'என் உள்ளமே! உன்னுடைய நலம் கருதி இந்த எச்சரிக்கை செய்கிறேன். அந்தக் குழந்தையுடன் நட்புக் கொள்ளும் தவறை ஒருபோதும் செய்து விடாதே. பிருந்தாவனத்துச் சிறுவன், புதிதாக உருக்கொண்ட மேகத்தின் வண்ணம் உடையவன், தன் விளையாட்டுப் புன்னகையால் மோகிக்கச் செய்திடுவான். அந்த இளநகை அமுததாரை பொழிவது போலத் தோன்றி வெகுவிரைவில் உன் அன்பிற்கு உரிய உடைமைகளை யெல்லாம் பறித்துக் கொண்டுவிடும்'.

வேறொரு எச்சரிக்கை வடிவில் லீலாசுகர் என்ற வில்வமங்களர் பாடுவதைக்கேளுங்கள்: 'ஓ பிரயாணியே! அந்த வழியில் போகாதே; ஆம்; அந்தப் பொல்லாத சிறு வீதியில் போகவேண்டாம். அங்கே ஒரு குழந்தை இடுப்பிலே கைவைத்துக்கொண்டு ஆடையின்றி அம்மணமாய் நின்றுகொண்டிருக்கிறான், ஒரு துறவி போல. அவன் உண்மையில் பக்காத் திருடன்; அந்த வழியே போகும் யாத்திரிகர்களை யெல்லாம் கொள்ளை யடிப்பவன். அவர்களுடைய மிகச்சிறந்த உடைமையாகிய நெஞ்சை அப்படியே களவாடிக் கொள்வான்!'

வேறொரு பக்தமணி கடவுளைப் புராணங்களிலும் வேதங்களிலும் கீதங்களிலும் தேடிப் பார்த்துக் களைத்துப் போன நிலையில் ஒரு சோலையில் ராதையுடன் கண்டுகொண்டதாய்த் தெரிவிக்கிறார். நம் பாரதியார் கூறுகிறபடி காதலெனும் சோலையில் தானே ராதை கற்பகமாய்க் காட்சி தருகிறாள் கண்ணனுக்கும் பக்தர்களுக்கும்.

*    *    *

காதலைப் பக்தியாக்கித் தெய்வநிலைக்கு உயர்த்தினர் ஆழ்வாரும் நாயன்மாரும். இந்தத் தெய்வ நிலைக் காதலே கண்ணன்—கோபியர் காதலென்றும், ராதாகிருஷ்ண தத்துவம் என்றும் கூறுவர் கிருஷ்ண பக்தர்கள். தமிழ்நாட்டு ஆழ்வார்களின் ஞான பக்தியை ராதாகிருஷ்ண வழிபாடாக்கி வட இந்தியாவின் கிழக்குப் பகுதியெங்கும் பரப்பியவர் ஸ்ரீகிருஷ்ணசைதன்யர் (1485—1533).

தம்மை ராதையாகப் பாவித்து இவர் கண்ணனைக் காதலித்தார். பிரேமையென்பதை லட்சியமாகக்கொண்டு அதை அடையும் வழியாகப் பக்தியைக் கொண்டார். 'கௌடிய வைஷ்ணவம்' என்ற இந்த அன்பு நெறியின் இறுதிலட்சியம் முத்தி என்ற விடுதலையன்று, பிரேமை என்று அன்புப் பாசமே.

சைதன்ய சரிதாம்ருதத்தில் காமத்திற்கும் பிரேமைக்கும் உள்ள வேறுபாடு வற்புறுத்தப்படுகிறது. பிரேமை என்பது தூய அன்பு; காமம் என்பது புலன் இன்பம். காமம் இருள் நெறி; பிரேமை ஒளி நெறி. காமம் மருளோடு வருவது; பிரேமை அருளோடு வருவது. காமம் நஞ்சுகலந்ததேன்; பிரேமை தெவிட்டாததேவாம்ருதம். பிரேமை ஆழ்வார்களின் 'சீரிய நற்காமம்'. காம வெறிக்கு மருந்து மெய்யன்பாகிய பிரேமை தான். இது சைதன்ய சம்பிரதாயத்தின் இதயம்.

ஸ்ரீ கிருஷ்ணசைதன்யரின் ராதர் கிருஷ்ண மதம் குறித்து ஆங்கிலப் பத்திரிகையாளரும் சிந்தனையாளருமாகிய **டப்ளியூ டி. ஸ்டெட்** பிரஸ்தாபிக்கும்போது 'இவ்வளவு அழகான, ஸர்வஜனரஞ்சகமான மதம் உலகத்தில் இன்னும் பரவவில்லையே. ஐரோப்பாவில் ஒவ்வொரு கிறிஸ்தவ தேவாலயத்திலும் ஸ்ரீசைதன்யரின் வாழ்க்கைக் குறிப்புகளும் உபதேசங்களும் பிரசாரம் செய்யப்பட வேண்டும்' என்றார்.

கோபியர் நிலையிலிருந்து கடவுளைத் தொழுவோருக்குக் கடவுளைத் தவிர உலகமெல்லாம் பெண் மயமாகவே தோன்றும். ஒரே புருஷன் ஜகன்மோகனபாலகோபாலன் தான். காமம் வெகுளி மயக்கம் என்ற முப்பகையையும், சாதி செல்வம் கல்வி என்ற

முக்குறும்பையும் வென்றவருக்கே இந்த நெறி சாத்தியமாகும்.

ராதாகிருஷ்ணன் ஏதோ ஒரு காலத்தில் இருந்து அன்புத் திருவிளையாடல்களை நிகழ்த்தினன் என்பதில்லை. அவனைப்போல் அந்த ராதாகிருஷ்ண நாடகமும் நித்தியமானது. நித்திய மனிதனும் நித்தியப் பெண்ணுமாக இருக்கும் ராதாகிருஷ்ணனை அந்தரங்க பிருந்தாவனத்திலே வழிபட வேண்டும் அந்தப் பிருந்தாவனம் எங்கும் இருக்கிறது; என்றும் இருக்கிறது.

இப்படி வழிபடும் தொண்டனுக்கு எல்லா மனிதர்களும் விலங்குகளும் பறவைகளும் மரங்களும் மலர்களும் தோழர்களாவர். 'இருள் தருமாஞாலம்' ராதாகிருஷ்ணனின் நித்திய அன்புத் திருவிளையாடல்களால் ஒளி பெற்றுக் காணும்.

ராதாகிருஷ்ண ச்ம்பிரதாயம் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாலு புருஷார்த்தங்களுடன் நின்றுவிடுவதில்லை. 'சீரிய நற் காம'மாகிய பிரேமையை, தூய மெய்யன்பை ஐந்தாவது புருஷார்த்தமாக உடையது இது.

முடிந்த முடிபாகிய உண்மை தெய்வ அன்புதான், பக்திக் காதல் தான் என்பதைக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள நற்பெருஞ் சிந்தனையாளர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தூய அன்பே உலக வெம்பிணிகளுக்கெல்லாம் மாமருந்து என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ராதாகிருஷ்ண தத்துவத்தில் பகவான் பக்தனுக்குப் பணி செய்ய விரும்பும் நிலையில் அவ்வளவு காதலுடன் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். கருத்து ஒருமித்து வேற்றுமையறக் கலந்திருக்கும் பக்திக் கலப்பு அது. யார் பெரியர்? யார் சிறியர்?—பக்தனா, பகவானா?' என்ற கேள்விக்குக்கூட இடமில்லாத அபூர்வ பக்திநிலை அது என்பர்.

கண்ணனது திருவிளையாடல்களில் ராதாகிருஷ்ண நாடகம் மிகமிகச் சிறந்தது என்பர். இங்கே பக்தன் எதிர்பார்ப்பது அன்பு ஒன்றே. இத்தகைய பக்தியில் அச்சத்திற்கு இடமே இல்லை. போர் பூசல் பகைமை அவநம்பிக்கை முதலான உலக நோய்களுக்கெல்லாம் ஒரு மருந்து ராதாகிருஷ்ண பக்தி என்றுகூடச் சொல்லலாம். இத்தகைய பக்தியால் ஒரு புதிய மண்ணையும் விண்ணையும் படைத்துக் கொள்ளலாம் என்பர்.

* * *

'இவ்வண்ணம் பேசுகிறார் ஜாரதுஷ்டரர்' என்ற தலைப்புடன் ஜெர்மன் தத்துவ சாஸ்திரி நீட்ஸ்கே தம் சிந்தனைகளை வெளியிட்டு வரும்போது ஓரிடத்தில், 'எந்தத் தெய்வத்திற்குக் கூத்தாடத் தெரியுமோ, அந்தத் தெய்வத்தையே நான் நம்ப முடியும்' என்கிறார். அப்படியானால் நடராஜ தத்துவம் இத்தகைய அறிஞரைக் கவர்ந்திருக்க முடியும். ராதைக்காக அன்புக் கூத்து ஆடுகிற நித்திய அழகனும் இளைஞனுமாகிய கண்ணபிரான் நீட்ஸ்கே போன்ற தத்துவ அறிஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கக் கூடும்.

## சந்தாதாரர்களுக்கு

**'திருக்கோயில்'** அலுவலகத்திற்கு கடிதம் எழுதுபவர்கள் சந்தா எண்ணையும் தவறாமல் குறிப்பிடவேண்டும்.

ஒவ்வொரு ஆங்கில மாதமும் 3, 4 தேதிகளில் 'திருக்கோயில்' இதழ் கிடைக்க வில்லையாயின் சம்பந்தப்பட்ட அஞ்சல் நிலையத்தில் விசாரிப்பதுடன், எங்கள் அலுவலகத்திற்கும் கடிதம் மூலம் தெரிவிக்கவேண்டியது.

ஆசிரியர்.

# சிவ விஷ்ணுத்தல அட்டவணை

## சிவத்தலங்கள்

| | தலம். (1) | இறைவன், இறைவி. (2) | பாடல். (3) | ரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| | **தொண்டை நாடு** | | | | |
| | சித்தூர் மாவட்டம். | | | | |
| 32 | திருக்காளத்தி | காளத்திசுரர், ஞானப்பூங் கோதை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | காளஹஸ்தி ... | வாயு தலம். சிலந்தி, பாம்பு, யானை பூசித்து முக்திபெற்ற தலம். கண்ணப்ப நாயனார் முக்தி அடைந்த தலம். தக்ஷிண கைலாசம் எனப்படும். கண்ணப்ப நாயனாருடைய அவதார தலமான உடுப்பூர் ராஜம்பேட்டைக்கு அருகில் உள்ளது. |
| | **சோழ நாடு** | | | | |
| | தஞ்சாவூர் மாவட்டம். | | | | |
| 1 | அகத்தியான்பள்ளி | அகத்திசுரர், பாகம்பிரியா நாயகி. | சம்பந்தர் ... | அகத்தியான்பள்ளி. | சுவாமியின் திருக்கல்யாண கோலத்தைத் தரிசிக்கும் பொருட்டு அகத்தியர் தங்கியிருந்து வழிபட்ட தலம். |
| 2 | அம்பர் ... | பிரமபுரீசுரர், பூங்குழலம்மை | சம்பந்தர் ... | பூந்தோட்டம் ... | மாடக்கோயில். சோமாசி மாற நாயனார் முத்தியடைந்த தலம். பெருந் திருக்கோயில் என தேவாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. |
| 3 | அம்பர்மாகாளம். | மாகாளநாதர், பயச்சயநாயகி. | சம்பந்தர் ... | பூந்தோட்டம் ... | அம்பன் அம்பாசுரன் என்னும் அரக்கர்களைக் கொன்ற பாவந்தீரக் காளிபூசை செய்த தலம். மகாகாள முனிவரும் பூசை செய்த தலம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 4 | அரதைப் பெரும் பாழி (அரித் துவாரமங்கலம்). | பாதாளேசுவரர், அலங்காரநாயகி. | சம்பந்தர் ... | சாலியமங்கலம் ... | சிவபெருமான் வராக அவதாரங்கொண்ட விஷ்ணுவினுடைய கொம்பை முறித்து தம்முடைய மார்பில் அணிந்தருளிய தலம். |
| 5 | அரிசிற்கரைபுத்தூர் (அழகார்புத்தூர்) | படிக்காசுஅளித்தஈசுவரர், அழகாம்பிகை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | கும்பகோணம் ... | புகழ்த்துணை நாயனார் முத்தியடைந்த தலம். உண்மையாநந்த முனிவர் பூசித்த தலம். |
| 6 | அவளிவணல்லூர். | சாட்சிநாயகேசுவரர், சௌந்தரநாயகி. | சம்பந்தர், அப்பர் ... | சாலியமங்கலம் ... | வராக அவதாரத்தில் சிவபெருமானாற் கொம்பு முறியப் பெற்ற விஷ்ணு பூசித்த தலம். காசிப முனிவர் பூசித்த தலம். |
| 7 | திருவழுந்தூர் ... | வேதபுரீசுவரர், சௌந்தராம்பிகை. | சம்பந்தர் ... | தேரழுந்தூர் ... | வேதங்களும் விண்ணவர்களும், அட்ட திக்கு பாலகர்களும் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சன்னிதி. |
| 8 | திரு ஆரூர் ... | வன்மீகநாதர், அல்லியங்கோதை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருவாரூர் ... | இவ்வாலயத்தை திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் சொல்லுவார்கள். மனுமுறை கண்ட சோழனும், 11 திருமுறைகளை செப்பேட்டில் செய்த அபயகுலசேகர அரசனும், 12–ம் திருமுறையை செப்பேட்டில் செய்த அநபாய சோழராஜனும் அரசாண்ட இடம். கமலாலயம் மிகவும் விசேஷம். விறன்மிண்ட நாயனார், நமிநந்தியடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள், கழற்சிங்க நாயனார் முதலிய அடியார்கள் முத்திபெற்ற முதுநகர். சப்த விடங்களில் முதன்மையான தலம். கமலாம்பாள் சன்னிதி விசேஷம். கமலாலய குளத்தின் ஈசான மூலையில் மாற்றுரைத்த பிள்ளையார் ஆலயம் இருக்கிறது. நமிநந்தி அடிகளுடைய அவதாரத் தலமான ஏமப்பேரூர் (திருநெய்ப்பேறு) தெற்கில் 6 மைலில் இருக்கிறது. |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 9 | திருஅன்னியூர் ... (பொன்னூர்) | ஆபத்சகாயேசுவரர், பெரியநாயகி. | சம்பந்தர், அப்பர் ... | நீடூர் ... | வருணன் பூசித்த தலம். |
| 10 | ஆக்கூர் ... | தான்தோன்றியப்பர், வாணெடுங்கண்ணியம்மை. | சம்பந்தர், அப்பர் ... | ஆக்கூர் ... | மாடக் கோயில். தான் தோன்றி மாடம் என்றும் பெயர். சிறப்புலி நாயனருடைய தலம். ஆயிரத்தி லொருவருடைய உற்சவ விக்கிரகம் இருக்கிறது. |
| 11 | திரு ஆப்பாடி ... | பாலுகந்த ஈசுவரர், பெரியநாயகி. | அப்பர் ... | ஆடுதுறை ... | சண்டேசுவர நாயனர் பூசைசெய்த தலம். |
| 12 | திரு ஆரூர் அரநெறி. | அரநெறியப்பர், வண்டார்குழலி. | அப்பர் ... | திருஆரூர் ... | இது திரு ஆரூர் கோயிலில் இரண்டாம் பிராகாரத்தில் மேற்கு முகமாய் உள்ளது. நமிநந்தி அடிகள் தண்ணீரால் திருவிளக்கு ஏற்றிவைத்த தலம். |
| 13 | திரு ஆரூர் பரவையுண்மண்டளி, | தூவாயநாதர், பஞ்சின்மெல்லடியம்மை. | சுந்தரர். | திருஆரூர் ... | தேர் நிலேக்குச் சமீபத்தில் இருக்கிறது. துருவாச முனி பூசித்த தலம். இங்குள்ள குளத்தில் மூழ்கித்தான் சுந்தரர் ஒரு கண்பார்வை பெற்றூர். |
| 14 | திரு ஆலம்பொழில். | ஆத்மநாதேசுவரர், ஞானம்பிகை. | அப்பர் ... | தஞ்சாவூர் ... | அஷ்டவசுக்கள் பூசித்தஸ்தலம். மேற்குப் பார்த்த சன்னிதி. |
| 15 | திரு ஆவடுதுறை. | மாசிலாமணீசுவரர், ஒப்பிலாமுலே அம்மை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | நரசிங்கன்பேட்டை. | திருமூலர் திருமந்திரம் அருளிய தலம். திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர் வாழ்ந்த பதி. அழகிய விநாயகரும் நந்தியும் விசேஷம். திருமூல நாயனருடைய அவதார தலமான சாத்தனூர் பக்கத்தில் இருக்கிறது. |
| 16 | ஆவூர் (பசுபதீச்சுரம்). | பசுபதீச்சுரர், மங்களநாயகி. | சம்பந்தர் ... | கும்பகோணம் ... | பசுக்கள் பூசித்த தலம். மாடக்கோயில். |
| 17 | இடும்பாவனம் ... | சற்குணநாதேசுவரர், மங்களநாயகி. | சம்பந்தர் ... | திருத்துறைப் பூண்டி. | இடும்பன் பூசித்த தலம். வெள்ளே விநாயகர் விசேஷம். |
| 18 | திருவிடைமருதூர். | மகாலிங்கேசுவரர், பெருநலமாமுலேநாயகி. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருவிடைமருதூர். | அப்பர் பூச ஸ்நானத்தைச் சிறப்பித்துப் பாடியிருக்கின்றூர். படித்துறை விநாயகரும் மூகாம்பிகையும் விசேஷம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 19 | இராமநதீச்சுரம் ... | இராமநாதேசுரர், கருவார்குழலி அம்மை. | சம்பந்தர் ... | நன்னிலம் ... | இராமர் பூசித்த தலம். |
| 20 | திரு இரும்பூளை (ஆலங்குடி) | காசி ஆரண்யேசுவரர், ஏலவார் குழலி. | சம்பந்தர் ... | நீடாமங்கலம் ... | விசுவாமித்திரர் பூசித்த தலம். |
| 21 | இன்னம்பர் ... | எழுத்தறிநாதேசுவரர், கொந்தார் பூங்குழல் அம்மை. | சம்பந்தர் ... | கும்பகோணம் ... | அகத்தியர் பூசித்து இலக்கணம் உபதேசிக்கப்பெற்ற தலம். ஐராவதம் பூசை செய்த தலம். நர்த்தன விநாயகர், கோயில் கம்பத்தில் இருக்கிறார். |
| 22 | திரு உசாத்தானம் (கோயிலூர்). | மந்திரபுரீசுவரர், பெரியநாயகி. | சம்பந்தர் ... | முத்துப்பேட்டை. | இராமர், இலக்குமணர், சுக்கிரீவன், அனுமார் பூசித்த தலம். இராமர் இலங்கைக்குப் போகுமுன் இங்கு உபதேசம் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இந்த இடத்திற்குச் சூதவனம் என்றும் விநாயகருக்கு சூதவன விநாயகர் என்றும் கூறப்படுகிறது. வெண்மை நிறமான சுயம்பு லிங்கம். |
| 23 | எதிர்கொள்பாடி. | ஐராவதேசுவரர், மலர்குழல்மாதம்மை. | சுந்தரர் ... | குற்றாலம் ... | ஐராவதம் பூசித்த தலம். |
| 24 | திருவையாறு ... | பஞ்சனதேசுவரர், அறம்வளர்த்தநாயகி. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | தஞ்சாவூர் ... | அப்பருக்குக் கைலாய தரிசனம் காட்டியருளிய தலம். சப்தஸ்தான தலங்களில் முதன்மையானது. ஆதிவிநாயகரும், ஆட்கொண்டார் சன்னிதியும் விசேஷம். |
| 25 | கஞ்சனூர் ... | அக்னீச்சுரர், கற்பகநாயகி. | அப்பர் ... | நரசிங்கன்பேட்டை. | அக்னியும், பிரமனும், பூசித்த தலம். அரதத்த சிவாச்சாரியார் சைவத்தின் மேன்மையை ஸ்தாபித்த தலம். இவருக்குத் தனி ஆலயம் இருக்கிறது. |
| 26 | திருக்கடவூர் ... | அமிர்தகடேசுவரர், அபிராமிஅம்மை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருக்கடவூர் ... | மேற்குப் பார்த்த சன்னிதி. அட்டவீரட்டானங்களில் ஒன்று. (யமனை உதைத் தருளிய தலம்). கால சங்காரமூர்த்தி சன்னிதி விசேஷம். குங்குலியக்கலய நாயனாரும், காரி நாயனாரும் அவதரித்து முத்திபெற்ற தலம். கள்ளவாரணப் பிள்ளையார் விசேஷம். |

# வைணவத் தலங்கள்

| | ஊரின் பெயர். (1) | பிரயாண வசதி. (2) | பெருமாள், தாயார் திருநாமம் (3) | மங்களா சாஸனம் செய்த ஆழ்வார்கள். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| | **வட நாடு** | | | | |
| 3 | துவாரபதி-த்வாரகா. | பம்பாய்-த்வாரகா லைன், த்வாரகா ஸ்டேஷன். | கல்யாண நாராயணன், கல்யாண நாச்சியார். | திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார். | முக்திதரும் நகர் ஏழில் இது ஒன்று. |
| 4 | திருவாய்ப்பாடி "கோகுலம்" எனப் படுவது. | மட்ரா ஸ்டேஷன் ... | நவமோகனகிருஷ்ணன், ருக்மிணிப் பிராட்டி, ஸத்யபாமைப் பிராட்டி. | பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார். | ...... |
| | வடமதுரை-கோவர்த்தனம்-பிருந்தாவனம். | பம்பாய்-டில்லி லைன், மட்ரா ஸ்டேஷன். | கோவர்த்தநேசன், சத்தியபாமை. | நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார். | வடமதுரை, பிருந்தாவனம், கோவர்த்தனம் மூன்றும் ஒரு திருப்பதி. முக்திதரும் தலம். |
| 6 | அயோத்தி ... | லக்னௌ-முகல்சராய் லைன், பைசாபட் ஸ்டேஷன். | சக்கரவர்த்தித் திருமகன், ரகுநாயகன், ஸீதாப் பிராட்டி. | நம்மாழ்வார், குலசேகரர், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார். | முக்திதரும் நகர் ஏழில் இத் திருப்பதி முதலாவது என நூல்கள் கூறும். |
| 7 | நைமிசாரண்யம் ... | பாலாமௌ-ஸீதாபூர் லைன், நிம்ஸார் ஸ்டேஷன். | தேவராஜன், ஸ்ரீ ஹரி லக்ஷ்மி புண்டரீக வல்லி. | திருமங்கையாழ்வார், | ...... |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 8 | கண்டங்கடிநகர், தேவப்ரயாகை. | லக்ஸார்-டேராடூன் லைன், ஹரித்வாரம் ஸ்டேஷன். | நீலமேகப்பெருமாள், புருஷோத்தமன், புண்டரீகவல்லித் தாயார். | பெரியாழ்வார் ... | எம்பெருமான் திருநாமங்கள் திருமங்கையாழ்வார் குறித்தவை. |
| 9 | பிரிதி (ஜோஷி மட்—நந்த்ப்ரயாக்). | ஷை | பரம புருஷன், பரிமள வல்லி. | திருமங்கையாழ்வார். | எம்பெருமான் திருநாமங்கள் திருமங்கையாழ்வார் குறித்தவை. |
| 10 | வதரியாச்சிரமம் (பதரிகாச்சிரமம்). | ஷை | பதரீ நாராயணன், அரவிந்தவல்லி. | பெரியாழ்வார், திருமங்கையாழ்வார். | இது இமயமலையில் உள்ள ப்ரபல யாத்ரா ஸ்தலம். திருமந்த்ரம் விளைந்த ஸ்தலமுமிதுவே. பனி உறையும் ஆறுமாதம் (ஐப்பசி முதல் சித்திரை வரை) பூஜை கிடையாது. சித்திரையில் கதவு திறந்ததும் முன் எரித்த திருவிளக்கு அப்படியே ஒளிருவது அதிசயிக்கத் தக்கது. |
| 11 | சாளக்கிராமம் (ஷாலிக்ராம்). | நேபாள ரயில்வே, அம்லகஞ்ச் ஸ்டேஷன். | ஸ்ரீமூர்த்தி, ஸ்ரீதேவி ... | பெரியாழ்வார், திருமங்கையாழ்வார். | இங்கு செல்வதற்கு நேபாள மன்னர் அனுமதி வேண்டும். |
| 12 | திருப்பாற்கடல் ... | ...... | க்ஷீராப்திநாதன், கடல்மகள் நாச்சியார். | திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார், இவரைத் தவிர மற்றனைவரும். | நம்போன்றவர் சென்று காணமுடியாத இடம். வடநாட்டுத் திருப்பதியில் இது கணக்கிடப்படுகிறது. |

## சோழ நாடு

### தென் ஆற்காடு மாவட்டம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | சித்திரகூடம் (சிதம்பரம்). | சென்னை–திருச்சி மெயின் லைன், சிதம்பரம் ஸ்டேஷன். | கோவிந்தராஜன், புண்டரீகவல்லி, | குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார். | சிதம்பரம் நடராஜர் கோயிலும், கோவிந்தராஜன் சந்நிதியும் ஒரே இடத்தில் உள்ளன. |
| 2 | திருக்கோவலூர். வடமொழியில் கோபாலபுரம் எனப்படும். | விழுப்புரம் - காட்பாடி லைன், திருக்கோயிலூர் ஸ்டேஷன். | திரிவிக்கிரமன், கோவலன் ஆயனுர், பூங்கோவல் நாச்சியார். | பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார். திருமங்கையாழ்வார். | முதலாழ்வார்கள் மூவரும் இடைகழியில் நெருங்குண்டு, அந்தாதிகள் பாடின இடம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 3 | திருவயிந்திரபுரம். "அஹீந்திரபுரம்" என்பர் வடமொழியில் | சென்னை-திருச்சி மெயின் லைன், திருப்பாதிரிப்புலியூர் ஸ்டேஷன். | தேவநாதன், வைகுண்ட நாயகி. | திருமங்கையாழ்வார். | வேதாந்த தேசிகன் மந்திரசித்தி பெற்ற தலம். |

**தஞ்சாவூர் மாவட்டம்**

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 4 | அரிமேயவிண்ணகரம் | சென்னை-திருச்சி மெயின் லைன், சீயாழி ஸ்டேஷன். | குடமாடுகூத்தன், அமிருதகடவல்லித்தாயார். | திருமங்கையாழ்வார். | திருநாங்கூர்த் திருப்பதிகளில் இது ஒன்று பெரிய திருமொழி 3-10, 8-இல் ஆழ்வார் குறித்த பெயர் "குடமாடு கூத்தன்" என்பது. |
| 5 | ஆதனூர். | சென்னை-திருச்சி மெயின் லைன், சுவாமி மலை ஸ்டேஷன். | ஆண்டளக்குமையன், ஸ்ரீரெங்கநாயகித் தாயார். | ,, | இங்கு கர்ப்பக்கிருகத்தில் திருமங்கையாழ்வார் எழுந்தருளி இருக்கின்றார். அவர் குறித்த நாமமே எம்பெருமானது. |
| 6 | கண்டியூர். வடமொழியில் "கண்டினபுரம்" என்பர் | சென்னை-திருச்சி மெயின் லைன், தஞ்சாவூர் ஸ்டேஷன். | அரன் சாபந்தீர்த்த பெருமாள், ஹரசாப விமோசனர் (வடமொழியில்), கமலவல்லித்தாயார். | ,, | பெருமாள் திருநாமம் ஆழ்வார் குறித்தது. |
| 7 | கவித்தலம் "கபிஸ்தலம்" வடமொழியில். | ஷை லைன், பாபநாசம் ஸ்டேஷன். | கஜேந்திரவரதர், ரமாமணிவல்லித்தாயார். | திருமழிசையாழ்வார். | இவ்வூரின் பெயர் ஆழ்வாரால் குறிப்பிடப்படவில்லை. "ஆற்றங்கரை" என்னும் சொல்லுக்கு "கவித்தலம்" என உரையிட்டனர். |
| 8 | காவளம்பாடி ... | ஷை லைன், வைத்தீஸ்வரன்கோயில் ஸ்டேஷன். | கோபாலகிருஷ்ணன், மடவரல் மங்கை, செங்கமலநாச்சியார். | திருமங்கையாழ்வார். | ..... |
| 9 | காழிச்சீராம விண்ணகரம். "தாடாளன் சந்நிதி" எனவும், "சீகாழி" எனவும் வழங்கும். | ஷை லைன், சீயாழி ஸ்டேஷன். | தாடாளன் - திரிவிக்கிரமப்பெருமாள், மட்டவிழுங்குழலித்தாயார். | ,, | பெருமாள் தாயார் திருநாமங்கள் ஆழ்வார் குறித்தவை. |

| | 11) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 10 | குடந்தை 'குடமூக்கு' எனவும் பெறும். கும்பகோணம் என்பது இதற்குரிய வடசொற்றொடர். | ஷை லைன், கும்பகோணம் ஸ்டேஷன். | சாரங்கபாணிப் பெருமாள், ஆராவமுது, கோமளவல்லித்தாயார். | பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையவார். | "குடமூக்கிற் பகவர்" என திருமழிசைப் பிரான் பெயர் பெற்றனர். "ஆராவமுது" என்பது நம்மாழ்வார் குறித்த திருநாமம். |
| 11 | கூடலூர் ஆடுதுறைப் பெருமாள் கோயில் என வழங்கும். | ஷை லைன், பாபநாசம் ஸ்டேஷன். | வையங்காத்தபெருமாள், பத்மாசனித் தாயார். | திருமங்கையாழ்வார். | ...... |
| | சிறுபுலியூர் ... | மாயவரம் - அறந்தாங்கி லைன், கொல்லுமாங்குடி ஸ்டேஷன். | அருமாகடல் பெருமாள், திருமாமகள் தாயார். | ,, | பெருமாள், தாயார் திருநாமங்கள் ஆழ்வார் குறித்தவை. |
| 13 | செம்பொன்செய் கோயில். | சென்னை - திருச்சி மெயின் லைன், சீயாழி ஸ்டேஷன். | பேரருளாளப்பெருமாள், அல்லிமாமலர் நாச்சியார். | ,, | திருநாங்கூர்த் திருப்பதிகளில் இதுவும் ஒன்று. |
| 14 | தஞ்சை மாமணிக் கோயில். | ஷை லைன், தஞ்சாவூர் ஸ்டேஷன். | நீலமேகப்பெருமாள், செங்கமலவல்லித் தாயார். | பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார். | ஒரே திருப்பதியாயினும், இதில் மூன்று கோயில்கள் வெவ்வேருக உள்ளன. தஞ்சை யாளிக்கோயில் "தஞ்சையாளியைப் பொன்பெயரோன் நெஞ்சமன்றிடந்தவனை" (பெரிய திருமொழி 7. 3, 9) என்று பாடப்பெற்றுள்ளது. மற்றொன்று மணிக்குன்றக்கோயில். அதற்குப் பாடல் தெரியவில்லை. இம்மூன்று கோயில்களும் வெண்ணாற்றங் கரையில் உள்ளன. |
| 15 | தலைச்சங்க நாண்மதியம், "தலைச்சங்காடு" என வழங்கும். | மாயவரம் - தரங்கம்பாடி லைன், ஆக்கூர் ஸ்டேஷன். | நாண்மதியப்பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள், தலைச்சங்க நாச்சியார், செங்கமல வல்லித்தாயார். | திருமங்கையாழ்வார். | ..... |